பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 02 திங்கட்கிழமை 15.03.2021 கதிர் 130

**இது ரகசியம் அல்ல!**

எமது பிராந்தியத்தின் தலைவர்களின் முக்கிய சந்திப்பு ஒன்று இன்னும் பத்து நாள்களுள் நடக்கவிருக்கின்றது.

வரும் மார்ச் 26ஆம் திகதி பங்களாதேஷ் நாடு உருவாகி ஐம்பதாவது வருடம்.

1971 வரை இந்தியா பக்கம்02 »

# ஈழத்தமிழர்களுக்கு ஐ.நா. மூலம் நிரந்தர நீதி கிடைக்க அழுத்தம்!

## தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க. உறுதி



ஈழத் தமிழர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் நிரந்தர நீதி கிடைக்கத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்படும் என்று அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு 163 வாக்குறுதிகளை உள்ளடக்கிய அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. ☞2

## அம்பிகையின் போராட்டம் வெல்ல தமிழர் தோள் கொடுக்க வேண்டும்

### மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் அழைப்பு



இலண்டனில் நீதிக்காகப் போராடும் அம்பிகை செல்வகுமார் என்ற பெண்ணின் குரலுக்குப் பிரிட்டன் அரசு செவிமடுக்க வேண்டும் என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதியை ☞2

## வவுனியாவில் மேலும் 4 பேருக்குத் தொற்று!

வவுனியாவில் மேலும் 4 பேருக்கு நேற்றிரவு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த வாரத்தில் இருந்து மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அவர்களுடன் ☞2

## மாகாணத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை

### அமைச்சர் சரத் வீரசேகர கூறுகின்றார்



மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞2

## வடக்கில் மேலும் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

### 7 பேர் யாழ்.சிறையில் அடையாளம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 13 பேர் யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ☞2

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரான் உளவாளி அல்லன்

### வதந்திகளுக்கு உயிரூட்டக்கூடாது என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீம், புலனாய்வுப் பிரிவின் உளவாளி அல்லன் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ☞2

## சொந்தக் கட்டடத்தில் கொமர்ஷல் வங்கி

யாழ்ப்பாணம், மார்ச் 15

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இன்று திங்கட்கிழமை 15 ஆம் திகதி முதல் சொந்த கட்டடத்தில் தனது சேவையை தொடரவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இன்று முதல் ☞2



காலைக்கதிர்
Kalaikkathir



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வின் இரு பக்கங்களிலும் கிழக்கிலும் மேற்கிலும் பாகிஸ்தான் இரண்டு பிரிவுகளாக இருந்தது – ஆனால் ஒரு நாடாகச் செயற்பட்டது. மேற்குப் பாகிஸ்தான், கிழக்குப் பாகிஸ்தானை அடிமைப்படுத்தும் விதத்தில் நடத்தியபோது 1971 மார்ச் 26ஆம் திகதி கிழக்குப் பாகிஸ்தானை 'பங்களாதேஷ்' என்ற தனி நாடாக அறிவித்தார் அதன் மக்கள் தலைவராக இருந்த வங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான். எனினும் மேற்குப் பாகிஸ்தான் அதனை ஏற்க மறுத்து, தனது இராணுவம் மூலம் பங்களாதேஷை ஆக்கிரமித்து ஆட்சியை நீடித்தது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தனது இராணுவத்தை வங்க தேசத்துக்குள் அனுப்பி மேற்கு பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் – அதன் இராணுவப் பிடியில் – இருந்த பங்களாதேஷை விடுவித்து புதிய தேசம் உருவாக வழி சமைத்தார். அதற்காக நடந்த இந்திய – பாகிஸ்தான் யுத்தம் 1971 டிசெம்பர் 16 ஆம் திகதி பாகிஸ்தான் படைகளின் சரணடைதலுடன் முடிவுக்கு வந்தது. எனினும் வங்கத் தந்தை முஜிபுர் ரஹ்மான் தனது தாயகத்தை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திய மார்ச் 26ஆம் திகதியே அந்நாட்டின் சுதந்திர தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்தியப் படையின் படையெடுப்பால், கிழக்கு பாகிஸ்தான் பங்களாதேஷ் நாடாகியது. மேற்கு பாகிஸ்தான் தனித்து பாகிஸ்தானாகியது.

இப்போது வரும் 26ஆம் திகதி பங்களாதேஷின் ஐம்பதாவது சுதந்திர தின நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இந்தியப் பிரதமர் மோடி அங்கு செல்கின்றார். இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கூட அந்நிகழ்வுக்குப் போகின்றார்.

வங்க பிதா ஷேக் முஜிபுர் ரஹ்மானின் மகள் ஷேக் ஹஸீனா வாஸட் அம்மையார் தான் இப்போது அந்த நாட்டின் பிரதமர்.

இலங்கை, இந்திய, பங்களாதேஷ் பிரதமர்கள் சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு நடுவில் தங்களுக்குள் சந்தித்துப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எது, எப்படி என்றாலும் இந்தப் பொன்விழா நிகழ்விற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பு பூர்த்தியாகியிருக்கும்.

அதில் நிச்சயம் பிரேரணைக்கு எதிராக – இலங்கைக்கு ஆதரவாக – பங்களாதேஷ் வாக்களித்திருக்கும். ஆகையினால் இலங்கை – பங்களாதேஷ் பிரதமர்கள் சந்திப்பில் மனக்கசப்பு இருக்காது.

ஆனால் இந்த வாக்கெடுப்பில் இந்தியா எப்படி நடந்து கொள்ளப்போகின்றது என்பது வாக்கெடுப்பு சமயம்தான் தெரியும்.

அதன் பிரதிபலிப்பு பங்களாதேஷில் இந்திய – இலங்கைப் பிரதமர்களின் சந்திப்பிலும் தாக்கங்களைச் செலுத்தும் என்பதும் ஊகிக்கத்தக்கதே.

பார்ப்போம், என்ன நடக்கின்றது என்பதை!

★ ★ ★

இது இன்னொரு அதிர்ச்சி தரும் கல்வித்துறைத் தகவல். பிரபல பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதிக்காக 'அன்பளிப்பு' (டொனேஷன்) பெறுவது பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம். அது குறித்த விவாதங்கள், இழுபறிகள் நீண்டவை. வருடா வருடம் அந்த சர்ச்சை வெடிப்பது வழமை.

'டொனேஷன்' கறந்தே தமது பௌதீக வளத்தை பல மடங்காக்கிக் கொண்டுள்ள பாடசாலைகள் இருக்கின்றன. அதேபோல தங்களை வளப்படுத்தி கொண்ட அதிபர்களும் தாராளம்.

இது, டொனேஷன் அறவீட்டைச் சுவறிக் கொண்ட இன்னொரு பிரிவு பற்றிய தகவல்.

அவர் ஒரு மூத்த கல்வி அதிகாரி. இப்போது ஓய்வுபெறுகின்றார். பிரிவுபசார விழா, அசத்தலான மலர் வெளியீட்டுடன் ஆரவாரமாக நடத்த ஏற்பாடாகியுள்ளது. அச்சுக்கூலி, விழாச் செலவு என்று பல லகரங்களில் காசு கரைகின்றது. மூலம் எங்கு என்று தேடிப்பார்த்தால் அதிர்ச்சி காத்திருந்தது. நகரில் ஒரு பிரபல பாடசாலையில் அந்த அதிகாரியின் ஒப்பம் மூலம் நடந்த பத்து அட்மிஷனுக்கான கிம்பளம், பிரியாவிடைச் செலவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தகவல் அரசல் புரசலாகக் கசிந்தது.

நல்ல அதிகாரிகள், நல்ல நிர்வாகம்...! பாவம், கல்விச் செயலாளர் இளங்கோவனார். கிளீன் நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவோம் என்று அவர் கங்கணம் கட்டி முறிகின்றார். ஆனால் விவகாரமோ சாண் ஏற முழம் சறுக்கும் கதையாக அல்லவா இருக்கின்றது..!

– மின்னல் –

## வடக்கில் மேலும் 14...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 422 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 14 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 13 பேரும், வவுனியா மாவட்டத்தில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர் என சுயதனிமைப்படுத்தப்பட்டவர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 7 கைதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டு வந்தவர்கள்.

மேலும் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலை ஊழியர் ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

## அம்பிகையின் போரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் அம்பிகையின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் கமல்ஹாசன் தனது ருவிட்டர் தளத்திலே பின்வருமாறு பதிவிட்டுள்ளார்.

இன அழிப்புக்கு நீதி கிடைக்கக் கோரி லண்டனில் ஈழத்துச் சகோதரி அம்பிகை செல்வகுமார் கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் உண்ணாநிலைப் போராட்டம் நிகழ்த்திக்கொண்டிருக்கின்றார்.

நீதிக்காகப் போராடும் பெண்மணியின் குரலுக்குப் பிரிட்டன் செவிமடுக்க வேண்டும். சகோதரியின் போராட்டம் வெல்ல தமிழர்கள் தோள் கொடுக்க வேண்டும் – என்றுள்ளது.

அம்பிகையின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 16 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

## சொந்தக் கட்டடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது சொந்த 'பசுமைக் கட்டடத்தில்' (தற்போதுள்ள வங்கிக்கு அருகில்) தனது சேவையை புதுப்பொலிவுடன் தொடரவுள்ளது.

இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தலைவரும் முன்னாள் பிரதம நீதியரசருமாகிய க.ஸ்ரீபவனும் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான சி.றெங்கநாதனும் பசுமைக் கட்டடத்தினை திறந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வாடிக்கையாளர்களது வங்கித் தேவைகளை இலகுமுறையில் நிறைவேற்றுவதற்கு நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய பண வைப்பு மற்றும் மீளப்பெறல் இயந்திரங்கள் போதுமான அளவிலும் (மீள்சுழற்சி இயந்திரம் – CRM), காசோலை வைப்பு இயந்திரம் மற்றும் மேலதிகமான பாதுகாப்பு பெட்டக வசதியுடன் (Safe Locker) தனது சேவையினை யாழ்ப்பாணக் கிளை விஸ்தரிக்கவுள்ளது.

# தாவடியில் கடைக்குள் திடீரெனப் புகுந்த கார்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.14

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி தாவடியில் உள்ள பழக் கடை ஒன்றிற்குள் கோண்டாவில் பகுதியில் இருந்து வேகமாக வந்த கார் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து உட்புகுந்தமையினால் கடை பெரும் சேதம் அடைந்தது.

நேற்று மாலை 4.30 மணியளவில் அத விபத்து இடம்பெற்றுள்ளது. தென் மாகாணப் பதிவைக் கொண்ட இந்தக் காரைச் செலுத்தி வந்தவர் மதுபோதையில் காணப்பட்டார் எனக் கூறப்பட்டது. விபத்து இடம்பெற்ற சமயம் சிலர் கடையில் பொருள்கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர். திடீரென ஒரு கார் தறிகெட்டு வருவதைக் கண்டு பதற்றத்துடன் குரல் எழுப்பியவாறு வெளித் திசையை நோக்கி ஓடியதனால் வாடிக்கையாளர்களும் கடைக்காரர்களும் உயிர் தப்பினர். கடை, கடையில் இருந்த தளபாடங்கள், விற்பனைப் பொருள்கள் எனப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்தைத் தொடர்ந்து சாரதியைக் கைது செய்த சுன்னாகம் பொலிஸார் காரையும் கொண்டு சென்றமையோடு வர்த்தக நிலையத்தினரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

# மேய்ச்சல் தரைப் பிரச்சினை இன்றைய அமைச்சரவையில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.15

வடக்கின் 4 மாவட்டங்களிலும் நிலவும் மேய்ச்சல்தரை பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலான அமைச்சரவை யோசனைத் திட்டம் இன்றைய அமைச்சரவைக்கு வரவுள்ளது.

வடக்கின் மிகப் பெரும் பொருளாதாரமான விவசாயம் மற்றும் கால் நடை வளர்ப்புக்களில் தற்போது மிகவும் நெருக்கடியை எதிர் நோக்கும் கால் நடை வளர்ப்பிற்கான மேய்ச்சல் தரை இன்மையே பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதோடு பருவகாலத்தில் மேய்ச்சல் தரை இன்மை காரணமாக கால்நடைகள் உயிரிழக்கும் நிலமையும் காணப்படுகின்றது.

இந்த விடயம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நீண்டகாலமாக தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டதோடு கடந்த ஆண்டு பல கால் நடைகள் உயிரிழந்தமை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது.

இதனையடுத்து இந்த் விடயம் கடந்த அமைச்சரவைக்கு கொண்டு வரப்பட்ட போதும் சில அமைச்சுக்களின் மேலதிக விளக்கத்திற்காக இந்த வாரத்திற்கு அது ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அந்த விடயம் இன்றைய அமைச்சரவையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது எனத் தெரிய வந்தது.

## மாகாணத் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்,

புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது. எனவே, புதிய அரசமைப்பின் பிரகாரம் மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி அதன் பின்னரே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே சிறப்பாக இருக்கும் – என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

சஹ்ரான் அரச உளவாளி எனவும், அவருக்கு சம்பளம்கூட வழங்கப்பட்டுள்ளது எனவும் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

சஹ்ரான் புலனாய்வுப்பிரிவின் உளவாளி அல்லன். எமது கொடுப்பனவுப் பட்டியலிலும் அவர் இல்லை. அவ்வாறு ஏதாவது தகவல் இருந்தால் உடன் சி.ஐ.டிக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதனைவிடுத்து வதந்திகளுக்கு உயிரூட்டக்கூடாது.

புலனாய்வுப் பிரிவினர், சஹ்ரானிடமிருந்து எந்தவொரு தகவலையும் பெறவில்லை. புலனாய்வு அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கவில்லை. எனவே, இத்தகைய குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றோம்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, சி.ஐ.டியிடம் சென்று அழுது புலம்பியுள்ளார். தனது அறிவிப்புக்கு மன்னிப்புக் கோரியும் உள்ளார். அவருக்கு எதிராக நிச்சயம் வழக்குத் தாக்கல் செய்யப்படும் – என்றார்.

## வவுனியாவில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்புடையவர்கள், ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்தோர் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் சுகாதாரத்துறையினரால் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதில் ஒரு தொகுதி முடிவுகள் நேற்றிரவு வெளியாகிய நிலையில், பூவரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும், வவுனியாவிலுள்ள கண்டி மரக்காலையில் பணியாற்றும் இருவருக்கும், கண்டி வீதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலையைச் சேர்ந்த ஒருவருக்கும் என நான்கு பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## ஈழத்தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படுகொலை உட்பட அநீதிகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேச நடுநிலை சுதந்திர தீர்ப்பாயம் மூலம் நடவடிக்கை எடுக்கும்படி அழுத்தம் கொடுக்கவுள்ளதாகவும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வாழ் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை மற்றும் குடியிருப்பு அனுமதி வழங்குவதற்கு மத்திய அரசை வலியுறுத்தவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் ஈழத் தமிழர்களின் உரிமைகள் கிடைத்திட மத்திய அரசின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைப்படுத்தப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய ஆணையிட வேண்டும் என்றும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஆயுதக் குழு என்பது எம் மீது திணிக்கப்பட்டதே!

## பிள்ளையான் கூறுகின்றார்



ஆயுதக்குழு என்பது எமது தேவைக்காக நிகழ்ந்த சம்பவத்தினூடாக எம்மீது கட்டாயமாக திணிக்கப்பட்ட விடயமாகும். தற்போது அந்தத் தேவை மாறி அரசியல்மயப்படுத்தப்பட்டிருக்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சிவநேசதுரை சந்திரகாந்தன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஆயுதத்தையும் நம்மையும் பிரிக்கமுடியாது.

ஆயுதக்குழு என்பது விடுதலைப்புலிகளும் ஆயுதக் குழுதான், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் ஆயுதக்குழுதான். ஆயுதக்குழு என்பது நமது தேவைக்காக நிகழ்ந்த சம்பவத்தினூடாக நம்மீது கட்டாயமாகத் திணிக்கப்பட்ட விடயமாகும்.

தற்போது அந்தத் தேவை மாறி அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு சமூகம் மாறுவதற்குரிய பிரதான பங்கு ஓர் அரசியல் இயக்கத்தினுடையதாகும். அந்த இயக்கம் தான் நாங்களாவோம். எங்களுக்கும் திட்டங்கள் இருக்கின்றன.

நாங்கள் பல வயல்களையும் வைத்துக் கொண்டு உன்னிசைக் குளத்தையும் வைத்துக் கொண்டு தண்ணீர் இல்லை என்று கூறுகின்றமைபிழையானவிடயமாகும். காத்தான்குடிக்கு ஹிஸ்புல்லா இருந்தார், அவர் அங்கு தண்ணீரை கொண்டு சென்றார். உங்களுக்கென்று யாருமிருக்கவில்லை.

மகிழவெட்டுவான் ஒரு பாரம்பரிய கிராமமாகும். ஐந்து வருடம் நல்லாட்சியில் இருந்தவர்கள் அங்கு இரண்டு வீதிகளையும் புனரமைக்கவில்லை. அங்கு பாடசாலையின் நிலையும் மோசமாகவுள்ளது. யோகேஸ்வரனின் சொந்த ஊரிலே இம்முறை முதலாம் தரத்திற்கு இரண்டு பிள்ளைகள் மட்டுமே. சமூகத்தில் வந்து வாக்கு கேட்டு வென்ற தலைவர்கள் தங்களுடைய கிராமத்தையே கட்டியெழுப்பவில்லை என்றால் அவர்களின் அரசியல் தோல்வியடைந்த ஒன்றாகும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹெரோயினுடன் இருவர் வவுனியாவில் கைதாகினர்!

வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவிற்கு அருகில் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த இருவர் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பகுதியில் ஹெரோயின் விற்பனை இடம்பெறவுள்ளதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் போதைப்பொருளைவிற்பனை செய்ய வந்த நபரையும், அதனைக் கொள்வனவு செய்ய வந்த ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து மில்லி கிராம் அளவிலான ஹெரோயின் போதைப்பொருளை மீட்ட பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

# சிறைச்சாலைகளில் மேலும் 65 பேருக்குக் கொரோனா!

கொழும்பு, மார்ச் 15

சிறைச்சாலைகளில் மேலும் 65 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட அனைவரும் ஆண் கைதிகள் என்றும் இதனை அடுத்து சிறைச்சாலையில் தொற்று உறுதியானோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 125 ஆக உயர்ந்துள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வெலிக்கடை சிறைச்சாலையில் 929 பேரும் மஹஸின் சிறையில் 881 பேரும் மஹர சிறையில் 836 பேரும் கொழும்பு ரிமாண்ட் சிறையில் 458 மற்றும் நீர்கொழும்பு சிறையில் 371 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

4 ஆயிரத்து 702 கைதிகள் மற்றும் 158 சிறைச்சாலை அதிகாரிகள் வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர் எனவும் 250 கைதிகள் மற்றும் இரண்டு அதிகாரிகள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அனைவருக்கும் புதிய பிறப்புச் சான்றிதழ்!

கொழும்பு, மார்ச் 15

இலங்கையர்கள் அனைவருக்கும் புதிதாக பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு பதிவாளர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இந்த பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அதில் ஒவ்வொரு நபருடைய பிறப்பு முதல் இறப்பு வரையான தகவல்கள் அடங்கிய தரவுகள் கணிணி மயமாக்கப்படும் என பதிவாளர் நாயகம் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது உள்ள பிறப்பு சான்றிதழ் புதுப்பிக்கப்பட்டு புதிய தேசிய பிறப்பு சான்றிதழ் வழங்கப்படும் என பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச நிறுவனங்களில் இடம்பெறும் தவறுகளை குறைக்க திங்கள் முதல் விசேட சோதனை!

கொழும்பு, மார்ச் 15

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் அரச நிறுவனங்களை விசேட சோதனைக்கு உட்படுத்தும் வேலைத் திட்டத்தின் முதலாவது கட்டம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் தவறுகளை குறைத்து, பொதுமக்களுக்கு செயல்திறன்மிக்கசேவையை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்தவேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

திங்கள் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 28 அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

# மன்னார் - இராமேஸ்வரம் இடையே கப்பல் சேவையை மீள ஆரம்பிக்குக!

## சார்ள்ஸ் எம்.பி. இந்தியத் தூதுவரிடம் வலியுறுத்தல்

(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் நடாத்த இந்தியா ஆவன செய்ய வேண்டும் என இந்தியத் தூதுவரிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

தலைமன்னாரிற்கும் இராமேஸ்வரத்திற்கும் இடைப்பட்ட 30 நோட்டிக் மைல் தூரத்துக்கு போரிற்கு முன்பு கப்பல் சேவை இடம் பெற்றது. அந்தசேவை இலங்கையில் இடம் பெற்ற போரின் காரணமாகவே கைவிடப்பட்டது. இதனால் மன்னார் மக்களும் வடக்கு மாகாண மக்களும் பெரும் தொகைப் பணத்தை செலவு செய்தே இந்தியா பயணிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலைமையை இந்தியா புரிந்து கொண்டு இந்த கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க முன் வர வேண்டும் என வடக்



கிற்கு 3 நாள் பயணமாக வருகை தந்துள்ள இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர், கப்பல் சேவை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான முயற்சிகளில் தற்போது கப்பல் சேவைக்கான பணியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை வரையில் சென்று விட்டோம். - என்றார்.




அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது என்பது முதுமொழி. குடும்பம் என்ற வண்டிக்கு அச்சாணியாக அமைவது நம்பிக்கையாகும். நம்பிக்கையின் அடிப்படையிலேதான் உலக வாழ்வும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மற்றவர்களை நம்பாமல் நாம் வாழ முடியாது. தொழிற்துறையை, அரசை நிர்வகிப்பதென்றாலும் மற்றவர்களின் ஒத்துழைப்பிலேதான் வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது. புரிந்துணர்வு என்ற நம்பிக்கையே செயற்பாடாகின்றது. எனவே இல்லற, பொதுவாழ்வுக்கும் ஆன்மீக வாழ்வுக்கும் நம்பிக்கை முதன்மைக் காரணியாக அமைகின்றது.

இயேசுவின் பணிக்காலத்திலே கப்பர்நகூம் என்ற ஊரிற்கு இயேசு வந்தபோது அரச அலுவலர் ஒருவரின் மகன் நோயுற்றுச் சாகும் தருவாயில் இருந்தான். தந்தை இயேசுவிடம் வந்து தன் மகனைக் குணமாக்குமாறு வேண்டினார். இயேசு அரச அலுவலனின் நம்பிக்கையை இனங்கண்டு “நீர் புறப்பட்டுப் போம் உம் மகன் பிழைத்துக் கொள்வான் என்றார்.” (யோவான் 4:50) இயேசுவின் வார்த்தையை அரச அலுவலனும் நம்பி வீட்டுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கையிலே மகன் குணமான செய்தி அவனிடம் பணியாளர்கள் வந்து கூறினர். இதனாலே அரச அலுவலனும் அவனது குடும்பமும் இயேசுவிலே நம்பிக்கை கொண்டனர்.

வைத்தியரிடம் மருந்து எடுப்பவருக்கு குணம் பெறுவோம் என்னும் நம்பிக்கை வேண்டும். ஆசிரியரிடம் கல்வி கற்பவர்கள் சித்தியடைவோம் என்று நம்ப வேண்டும். முதலாளியிடம் வேலை செய்பவர்கள் ஊதியம் கிடைக்கும் என்றும், வேலையாள் வேலை செய்வான் என்று முதலாளியும் நம்ப வேண்டும். அவ்வாறே குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும். ஆன்மீக வழிகாட்டிகளையும் பக்தர்கள் நம்ப வேண்டும். ஒருவரை நம்பி மற்றவர் வாழ வேண்டும் என்பதே இறை படைப்பின் நியதியாக அமைந்திருக்கின்றது. இல்லையேல் வீண் சங்கடங்களுக்கு ஆளாகவே நேரிடும்.

மற்றவர்களை நம்பியே ஒவ்வொருவரின் வாழ்வும் பின்னிப் பிணைந்துள்ளது. எவரையும் தேவையற்றவர் என்றோ பயன்பாடில்லாதவர் என்றோ நாம் தள்ளிவிடமுடியாது. பலருடைய பங்களிப்பின் பலன்களாலே நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்து வருகின்றோம் என்ற உண்மை உணரப்படவேண்டும். இவ்வாறு உணரும்போது பகைமை உணர்வுகள், பழிவாங்கும் மனப்பாங்குகள், பிரிவினைகள் இன ஒடுக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள் படிப்படியாக அகன்றொழியும் சகோதரத்துவ மனித மாண்பு எம்மிலே மலரும்.

**அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்**
**ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நடக்குமா மாகாணத் தேர்தல்?

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து மீண்டும் பேச்சடிபடத் தொடங்கியுள்ளது.

ஜுன் மூன்றாம் வாரத்தில் அந்தத் தேர்தலை நடத்துவதற்கான முன் முயற்சிகளை அரசு ஆரம்பித்திருப்பதாக இரண்டு வாரங்களுக்கு முன்னரே கொழும்பின் பிரபல ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

ஆனால், அது வெளியான கையோடு ஆளும் தரப்பிலிருந்ததே மறுப்புகள் பறந்து வந்தன. அப்படி ஏதும் ஏற்பாடு நடக்கவில்லை என்று மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கான இராஜாங்க அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மூலமாகவே மறுத்துரைப்பு வெளியானது. அப்படி ஒரு மறுப்பை வெளியிட அவர் தூண்டப்பட்டார்.

மாகாணசபைத் தேர்தல் என்பது, 13ஆவது திருத்தத்தை மீள அங்கீகரிக்கும் நடவடிக்கை, அரசமைப்பைப் புதிதாக யாக்கும் போது மாகாண சபை முறைமையே முற்றாக நீக்கப்படவேண்டும், அதற்கிடையில் இப்போது தேர்தல் ஏன் என்பது இப்போது அதிகார பீடத்தில் கோலோச்சும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் நிலைப்பாடு.

தமிழர்களின் அதிகாரப் பகிர்வு கோரிக்கையின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டதே 13ஆவது அரசமைப்புத் திருத்தமும் மாகாண சபை முறைமையும் என்பது வெளிப்படையானது.

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் என்ற பெயரில் 1987ஆம் ஆண்டின் இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் 13ஆவது திருத்தத்துக்கு வழி செய்யப்பட்டது.

மாகாண சபை முறைமையை அங்கீகரித்துக் கொண்டு நடத்துவதும், அதன் கீழ் மாகாணத் தேர்தல்களை நடத்தி மாகாண சபைகளை மக்கள் பிரதிநிதிகள் மூலம் செயற்படுத்தி, நிர்வகிப்பதும் தமிழர்கள் கேட்ட தமிழீழத்தை அவர்களுக்குக் கையளிப்பதற்கு சமம் என்றெல்லாம் கூட விதண்டா வாதப் பிரசாரம் செய்கின்றது சிங்களப் பேரினவாதம்.

மாகாண சபைத் தேர்தல்களுக்கு முகம் கொடுக்க அஞ்சிய முன்னைய நல்லாட்சி அரசு – குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்காக மாகாண சபைத் தேர்தல் முறைமைகள் தொடர்பான சட்டங்களில் ஏற்படுத்திய குழப்பங்களும் – அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய ஒத்துழைப்பும் – அந்தத் தேர்தல்களை கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் நடத்த முடியாத இழுபறி நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றமை தெரிந்ததே.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை முறைமையே நாட்டில் செயற்படவில்லை, அதனால் நாட்டுக்கு எந்தக் குறையும் வந்து விடவில்லை என்று கூறும் பௌத்த, சிங்களத் தீவிரவாதிகள், அதனால் நாட்டுக்கு அந்த முறைமையே தேவையில்லை என்றும் இப்போது நியாயம் பிளக்கின்றனர்.

இந்தக் கருத்தை இதுவரை மறுத்துரைக்காமல் இருந்து வந்தார் நாட்டின் தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இவ்வாண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பை ஏற்படுத்தும் உறுதியில் இருக்கும் அவர், புதிய அரசமைப்பை உருவாக்கும் போது, தனது சகாக்களான பேரினவாதிகளின் வலிமையான அழுத்தத்துக்கு அடிபணிந்து, மாகாண சபை முறைமையை நீக்கும் வரலாற்றுத் தவறுக்குத் துணை போவர் என்றே பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், இப்போது அவரே அதிகாரிகளை அழைத்து மாகாண சபைத் தேர்தல்களை ஜுனில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு வழிப்படுத்துகின்றார்.

தாம் நியமித்த தமது தேர்தல்கள் ஆணைக்குழுவை அழைத்து மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான ஒழுங்குகள் குறித்து பேசுகின்றார்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு வசதியாக நிறைவேற்றப்பட வேண்டிய சட்டங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் உரையாடுகின்றார்.

மாகாணத் தேர்தல்களை எதிர்கொள்வதற்குத் தயாராகுங்கள் என்று தமது கட்சியினருக்கு சமிக்ஞை செய்கின்றார்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடித்தால் – அல்லது அந்த முறைமையை ஒரு தலைப்பட்ச முடிவுடன் இல்லாதொழிப்பதற்குத் தமது அரசு தீர்மானித்துச் செயற்பட்டால் – ஏற்படக்கூடிய விளைவுகளை, விபரீதங்களை அவர் புரிந்து கொண்டிருக்கின்றார். அதன் பிரதிபலிப்புத்தான் இந்த மாற்றமும் நடவடிக்கைக் கோலமுமாகும்.

ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் அடுத்த ஒரு வாரத்துக்குள் பெரிய நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் கோட்டாபய அரசு, அதற்கு முகம் கொடுப்பதற்கு இந்தியாவின் ஆதரவைக் கோரி நிற்கின்றது.

இந்தக் கட்டத்தில் இந்தியாவை வளைத்துப் போடுவதற்காக, மாகாணசபைத் தேர்தலை நடத்தும் இந்திய விருப்பத்தை நிறைவு செய்வது போல காட்டுவது, ஜெனிவாப் பிரச்சினை ஓய்ந்ததும், 'ஆறு கடக்கும் வரை அண்ணன் – தம்பி உறவு, கடந்த பிறகு நீ யாரோ, நான் யாரோ...!' என்ற மாதிரி மாகாண சபைத் தேர்தல் திரும்பவும் கிடப்பில் போடப்பட்டு விடுமோ, யாருக்குத் தெரியும்?

# வடக்கு காணி ஆவணங்கள் சென்றமைக்கு காணி அமைச்சரே பதிலளிக்க வேண்டும்!

## மனோ கணேசன் காட்டம்



வடக்கில் உள்ள நான்கு மாவட்டங்களின் காணி ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாக அநுராதபுர நாடாளுமன்ற உறுப்பினர் காணியமைச்சர் சந்திரசேன பதிலளிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) டுவிட்டரில் பதிவிட்டுள்ள மனோ -

யாழ்ப்பாணத்திலிருந்த வட மாகாண பிராந்திய காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம், இப்போது யாழ் மாவட்ட அலுவலகமாக குறைக்கப்பட்டு, வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களின் ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாக அநுராதபுர நாடாளுமன்ற உறுப்பினர் காணியமைச்சர் சந்திரசேன பதிலளிக்க வேண்டும் எனப் பதிவிட்டுள்ளார்.

கடுமையான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் தமிழர் தாயகத்தின் வடக்கு மாகாணத்துக்குரிய அனைத்து காணிகளுக்கான ஆவணங்களும் அநுராதபுர மாவட்ட செயலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி ஆவணங்களை எடுத்துச் செல்ல முற்பட்ட போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பொது மக்களும் யாழ்.செயலக வாசலுக்கு முன்பாக ஒன்று கூடி கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

ஆனால் இது காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் முடிவு என்றும் தன்னால் எதுவும் செய்ய முடியாது எனவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் அப்போது தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மாலை அவசர அவசரமாக அனைத்து ஆவணங்களும் அநுராதபுர மாவட்ட செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பிகையின் அஹிம்சைப் போர் தொடர்ந்தும் பிரித்தானியா மௌனமாக இருப்பது வேதனை!

## சிவசக்தி ஆனந்தன் கவலை

தாயக உறவுகளுக்கு நீதி வேண்டி இரண்டுவாரங்கள் கடந்தும் அறப்போர் நடத்தி வரும் அம்பிகை செல்வகுமாரின் உடல்நிலைமை மோசமடைந்துள்ள நிலையில், பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் மௌனமாக இருக்கின்றமை வேதனையளிப்பதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் -

இலங்கை தொடர்பாக பிரித்தானிய அரசாங்கம் தலைமையில் கொண்டு வரப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் எனும் தலைப்பிலான பிரேரணையில், தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் உள்ளிட்ட நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து பிரித்தானியாவில் அம்பிகை செல்வகுமார் கடந்த 15 நாள்களாக அஹிம்சை வழியில் போராட்டத்தை நடத்தி வருகின்றார்.

இவருடைய போராட்டத்தை வலுப்படுத்தும் முகமாகவும் அவருடைய நான்கு அம்சக் கோரிக்கைகளுக்கு மேலும் ஆதரவளித்தும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் அனைத்து பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்கள், கவனவீர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே உள்ளன.

தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதிகோரி தன்னெழுச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போதும் அரசாங்கமும் சர்வதேசமும் அமைதியாகவே இருக்கின்றமை துரதிஷ்டவமானது.

விசேடமாக அம்பிகை செல்வகுமார், உலகிற்கு ஜனநாயக விழுமியக் கற்பிதங்களை வழங்கும் பிரித்தானியாவில் தனது அறப்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். தற்போது வரையில் ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்களே தற்துணிவின் அடிப்படையில் ஆதரவுக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், பிரித்தானிய அரசாங்கம் தொடர்ச்சியாக மௌனித்த நிலையிலேயே இருக்கின்றது. இவ்விதமான நிலையில் பிரித்தானிய அரசாங்கம் இருப்பதானது அதிர்ச்சியையும் வேதனையும் அளிப்பதாக உள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போரின்போது நிகழ்த்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரித்தானியா அறியாமலில்லை. அதுபற்றிய ஆவணங்களையும் பிரித்தானியா கொண்டிருக்காமல் இல்லை. அதேநேரம், நீதியை எதிர்பார்த்திருக்கும் தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களையும் கோரிக்கைகளையும் பிரித்தானியா உணராமலும் இல்லை.

அவ்வாறான நிலையில், நியாயமான நீதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் அம்பிகை செல்வகுமார் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் உள்ளீர்த்து நிறைவேற்றப்படவுள்ள இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் பிரேரணையை மேலும் வலுப்படுத்த வேண்டும். அவ்விதமான செயற்பாடே ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கும் என்றுள்ளது.

# கிளிநொச்சி - நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு; மக்கள் கவலை!

கிளிநொச்சி- நெத்தலியாறு ஆற்றுப்பகுதியில் பல வருடங்களாக சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக அந்தப் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆறு, 66 அடி ஆழமாக இருந்துள்ளது. எனினும் தற்போது சட்டவிரோதமான மண் அகழ்வினால் 500 அடி ஆழமாக சென்றுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இந்த ஆற்றுப்பகுதியில் பெரும்பாலான மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றமையுடன், தமது மூதாதையர் காலம் முதல் குறித்த ஆறு இருந்து வருகிறது எனவும் அப்பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே, நெத்தலியாறு ஆற்றுப்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மெய்நிகர் வகுப்பறை

11

## Online Classroom

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மெய்நிகர் வகுப்பறை பற்றி நாம் பல தொடர்களில் பார்த்து விட்டோம். இதன் சுருக்கமாக சில பண்புகளை இங்கு நாம் பார்ப்போம்.

பாரம்பரியக் கல்வி என்ற கருத்து கடந்த இரண்டு ஆண்டுகளில் தீவிரமாக மாறிவிட்டது. ஒரு வகுப்பறையில் பௌதீகரீதியாக இருப்பது இனி தேவையற்றதாகின்றது. ஓரிடத்தில் இருந்து கற்றல் விருப்பமற்றதாக மாறிவருகின்றது. இப்போதெல்லாம், நீங்கள் ஒரு கணினியை அணுகும் வரை, எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் தரமான கல்வியை அணுகலாம் என்ற நிலை தோன்றிவிடுகிறது. கல்விப்புலம் இப்போது ஒரு புதிய சகாப்தத்தில் நுழைகிறது - ஒன்லைன் கல்வியின் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தசாப்தத்தில் நாம் வாழ்கிறோம்.

இந்தப் புரட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில் இணையம் வழிக் கல்வி பற்றிய சந்தேகங்களும் உள்ளன. வழக்கமான வகுப்பறையை விட்டு வெளியேற வேண்டும் என்ற பயம் பழைமைவாதிகளிடம் தொற்றிக்கொள்கின்றது. அது கல்வியைப் பாழாக்கும் என்ற கருத்து வலுப்பெற்றுவருகின்றது. குறிப்பாக, வெப் 2 தொழில்நுட்பத்தில் வழி கிடைக்கப்பெற்ற 'இணையம்' என்று அழைக்கப்படும் இந்த பரந்த வெளியை எதிர்கொள்ள முடியாததால் தொழில்நுட்பத்தை அணுகுவதற்காகத் தம்மைத் தயார்படுத்த முடியாததால் இந்த எண்ணம் வலுப்பெறுகின்றது.

'இணையவழி கல்வி' ஒரு மாற்றம். சாதக, பாதக விளைவுகளைத் தரவல்லது. இதனைப்புரிந்து கொண்டு நகரவேண்டியுள்ளது. இது மாணவர் எண்ணிக்கையைக் குறைக்கும் என்ற கருத்தும் பல மாணவர்களுக்கு செல்லுபடியாகும் மற்றும் பயனுள்ளதாக அமையும் என்றும் குறிப்பிடப்படுகின்றது. ஒன்லைன் கல்வி என்பது நீங்கள் ஓர் இளைஞனாக இருந்தாலும் அல்லது வயது வந்தவராக இருந்தாலும் அணுகக் கூடியதாகும். பாகுபாடின்றி அனைவரும் அணுகக் கூடியதாகிறது. ஒரு மாணவராக, கடினமான விடயத்



தில், திறமைகளைக் கூர்மைப்படுத்துவதற்கு இது ஒரு பயனுள்ள கற்றல் முறையாக இருக்கிறது அல்லது புதிய திறமையைக் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கிறது.

எதிர்காலக் கல்வி இணைய வழியிலேயே நகரும், அதற்காக உலகம் தயாராக வேண்டியிருக்கிறது. பல காரணங்களால் எதிர்காலக்கல்வி உலகை ஒன்லைன் கல்வி ஆக்கிரமிக்கவுள்ளது.

### 1. நெகிழ்வுத் தன்மையானது

ஒன்லைன் தளத்தை கல்விப் புலம் பயன்படுத்துவதால் படிப்புக்கான வயதெல்லை தகர்க்கப்பட்டுள்ளது. இடம் மற்றும் காலம், குறிப்பாக நேரம் என்பது நெகிழ்வானதாகியிருக்கிறது. எந்தவொரு கண்டத்திலோ தேசத்திலோ இருந்து வசதியான நேரத்தில் கற்க முடிகிறது. வேலை மற்றும் படிப்புகளின் சிறந்த சமநிலையை அனுமதிக்கிறது. எனவே குடும்பச்சுமை, வேலைப்பழு எதையும் விட்டுவிட வேண்டிய அவசியமில்லை. அதற்கான நேர மேலாண்மைத் திறன்களைக் இணையவழிக் கல்வி கற்பிக்கிறது. இது ஒரு வேலை - படிப்பு சமநிலையைக் கண்டறிவதை எளிதாக்குகிறது. மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையில் ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருக்க வாய்ப்பளிக்கிறது. இரு தரப்பினரையும் புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவும் அதிக சுயாட்சியைக் கொண்டிருக்கவும் தூண்டுகிறது. மெய்நிகர் கல்வி ஆசிரியருக்கும் மாணவனுக்கும் தங்கள் கற்றல் வேகத்தை அமைக்க உதவுகிறது. மேலும் அனைவரின் நிகழ்ச்சி நிரலுக்கும் பொருந்தக்கூடிய ஓர் அட்டவணையை அமைப்பதற்கான கூடுதல் நெகிழ்வுத் தன்மை இதில் கிடைக்கிறது. இதன் விளைவாக எதிர்காலத்தின் கற்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பலதுறை அறிவுடையவர்கள் அதிகரிப்பார்கள். இதனால் பல்துறை அணுகுமுறை சார்ந்த துறைசார் வளர்ச்சிகள் அதிகரிக்கும்.

### 2. பல்துறை ஆற்றலுக்கான நிரல்களை வழங்குகிறது.

இணையத்தைப் போன்ற பரந்த இடத்தில், கற்பிக்கவும் கற்றுக்கொள்ளவும் எல்லையற்ற திறன்களும் பாடங்களும் உள்ளன. பெருகிவரும் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்விப் பள்ளிகள் பல்வேறு நிலைகளுக்கும் துறைகளுக்கும் தங்கள் திட்டங்களின் ஒன்லைன் பதிப்புகளை வழங்குகின்றன. இசை அமைப்பு முதல் குவாண்டம் இயற்பியல் வரை, ஒவ்வொரு வகை மாணவர்களும் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற இணைய வழிக்கல்வி வாய்ப்பளிக்கிறது. மெய்நிகர் படிப்பது ஒரு பல்கலைக்கழக வளாகத்தில் உடல் ரீதியாக கால் வைக்காமல் அதிகாரப்பூர்வ சான்றிதழ், டிப்ளோமா அல்லது பட்டம் பெறுவதற்கான சிறந்த வழியாக அணுகப்படலாம்.

மெய்நிகர் கல்வி உலகில் எங்கிருந்தும் படிக்க அல்லது கற்பிக்க உதவுகிறது. இதன் பொருள், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பயணிக்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு மேல், நேரத்தை மிச்சப்படுத்துவது மட்டுமல்லாமல், பணத்தை மிச்சப்படுத்த முடிவதால் பலருக்கு கற்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. இணைய இணைப்பு உள்ள எந்த இடத்திலும் மெய்நிகர் வகுப்பறை கிடைக்கிறது எடுத்துக்காட்டாக, நீங்கள் வெளிநாட்டில் படித்து வேலை பெற விரும்பினால், ஒன்லைன் கல்வி ஒரு சிறந்த தேர்வாகும். இதனால் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. புதிய மற்றும் கவர்ச்சியான கல்வி வாய்ப்புக்களால் இதனை ஆராயும்போது வேலை செய்வதையோ அல்லது படிப்பதையோ விட்டுவிட எந்த காரணமும் இல்லை. எப்போதும் எங்கும் யாராலும் எந்தவொரு துறையிலும் மெய்நிகர் கல்வியல் பயில முடியும். கல்வி சிலருக்கு மட்டுமே என்று இருந்தகாலம் முடிவடைந்திருப்பது புதிய நிரலொழுங்குஎனலாம்.

### 3. பிரத்தியேகமான கற்றல் அனுபவத்தை அனுமதிக்கிறது.

உங்கள் சொந்த படிப்பு வேகத்தை, காலத்தை நீங்களே மெய்நிகர்கல்வியல் திட்டமிட்டுக் கொள்ள முடியும். அதாவது மெய்நிகர் கல்வி ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட தேவைகளுக்கும் திறன் அளவிற்கும் ஏற்ப கிடைக்கிறது. மெய்நிகர் வகுப்புகள் வழக்கமான வகுப்பு அளவை விடசிறியதாக இருக்கும். பெரும்பாலான நேரங்களில், ஒன்லைன் கற்றல் தளங்கள் ஒரு நேரத்தில் ஒரு மாணவரை மட்டுமே அனுமதிக்கின்றன, கிட்டத்தட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும், இது மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் இடையில் அதிக தொடர்பு மற்றும்



மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையில் ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருக்க வாய்ப்பளிக்கிறது. இரு தரப்பினரையும் புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவும் அதிக சுயாட்சியைக் கொண்டிருக்கவும் தூண்டுகிறது. மெய்நிகர் கல்வி ஆசிரியருக்கும் மாணவனுக்கும் தங்கள் கற்றல் வேகத்தை அமைக்க உதவுகிறது. மேலும் அனைவ ரின் நிகழ்ச்சி நிரலுக்கும் பொருந்தக்கூடிய ஓர் அட்ட வணையை அமைப்பதற்கான கூடுதல் நெகிழ்வுத் தன்மை இதில் கிடைக்கிறது. இதன் விளைவாக எதிர்காலத்தின் கற்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பலதுறை அறிவுடையவர்கள் அதிகரிப்பார் கள். இதனால் பல்துறை அணுகுமுறை சார்ந்த துறைசார் வளர்ச்சிகள் அதிகரிக்கும்.

அதிக கருத்துப் பரிமாற்றங்களை அனுமதிக்கிறது.

ஒன்லைனில் வீடியோக்கள், புகைப்படங்கள் மற்றும் மின்புத்தகங்கள் போன்ற பலவிதமான பொருள்களுக்கான அணுகல் பெரும்பாலும் மெய்நிகர் கல்வி உள்ளது, மேலும் ஆசிரியர்கள் தங்கள் பாடங்களை மேம்படுத்த அரட்டைகள் அல்லது விவாதங்கள் போன்ற பிற வடிவங்களையும் ஒருங்கிணைக்க முடியும். இந்த கூடுதல் உள்ளடக்கம் எந்த நேரத்திலும் எங்கிருந்தும் கிடைக்கிறது, இதனால் பிரத்தியேக கற்றல் வாய்ப்பு கிடைக்கிறது. இதன்வழி ஆற்றல்மிக்க கல்வியை இணையவழிக் கல்வியில் பெறமுடியும்.

### 4. செலவு குறைந்ததாகும்.

பாரம்பரியமான கல்வி முறைகளைப் போலன்றி, ஒன்லைன் கல்வி மிகவும் செலவு குறைந்தது. பலவிதமான கட்டண விருப்பங்களும் தவணைகளில் பணத்தை ஒரு வகுப்பிற்கு செலுத்த அனுமதிக்கின்றன. இது சிறந்த பட்ஜெட் நிர்வாகத்தை அனுமதிக்கிறது. இணையவழிக் கல்விக்கு நாணய முதலீடு குறைவாக உள்ளது, ஆனால் முடிவுகள், விளைவுகள் சிறப்பாக இருக்கும்.

மெய்நிகர் கற்றல் ஒவ்வொரு மாணவரும் தங்களது தனித்துவமான நிலைமையை மதிப்பிட்டு அவர்களின் தேவைகள் மற்றும் குறிக்கோள்களுக்கு ஏற்ப தீர்மானிக்க உதவுவதால் அதனைநாடி மாணவர்கள் செல்ல விரும்புவார்கள். மேலும் பாரம்பரிய கல்விக்கான இந்த மாற்று அனைவருக்கும் பொருந்தாது என்றாலும், உலகெங்கிலும் பாரம்பரிய கல்வி மாற்றமடைந்து மெய்நிகர்கல்விக்கு மாறி வருகின்றன. ஒவ்வொருவரதும் முடிவற்ற கற்றல் விருப்பங்களுடன் இது இன்னும் வசதியான விருப்பமாகும். அதனால் இது எதிர்காலக் கல்வியாகிறது.

(தொடரும்...)

# 13 கொண்டுவந்ததுக்கான இலக்கு இதுவரையில் அடையப்படவில்லை!

## வெளிவிவகார செயலாளர் கொலம்பகே தெரிவிப்பு

* இந்தியத் தூதுவராக மொரகொட பதவி ஏற்பார்.
* புதிய அரசமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும்.
* துறைமுகங்களில் வெளிநாட்டுப் படைகளுக்கு அனுமதி இல்லை.



கொழும்பு, மார்ச் 15

கடந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளதோடு 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டதற்கான இலக்குகள் அடையப்படவில்லை. இந்நிலையில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று வெளிவிவகார செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக மிலிந்த மொரகொட விரைவில் பொறுப்பேற்கவுள்ளமையோடு, அமைச்சரவை அந்தஸ்துடன் அவர் செல்ல வேண்டுமென ஜனாதிபதியே அதிக விருப்புடன் இருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின் போது 13 ஆவது திருத்தச்சட்டம், இந்தியாவுக்கான தூதுவர் மற்றும் சீனாவின் 'ஒரேபட்டி ஒரே பாதை' திட்டத்தில் பங்கேற்றுள்ளமை தொடர்பில் கருத்துவெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு –

கேள்வி:- புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் போது 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நீக்கப்படவுள்ளதா?

பதில்:- இந்தியாவின் தலையீட்டின் காரணமாகவே 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் வன்முறையை நிறுத்துவதற்கும், மாகாணங்களை முன்னேற்றுவதற்கும் முடியும் என்றே இந்தியா கருதியது. துரதிஷ்டவசமாக அந்த இலக்குகள் அடையப்படவில்லை. பின்னர் அரசாங்கத்தின் முயற்சியால் தான் அந்த இலக்குகள் அடையப்பட்டன.

மாகாணங்களுக்கு அனைத்து அதிகாரங்களையும் அரசாங்கத்தால் வழங்க முடியாது. ஆனால் அதிகாரங்கள் மறுசீரமைக்கப்பட்டு மாகாண சபைகள் வினைத்திறனாகச் செயற்படுவதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

அதேநேரம், தற்போதைய அரசமைப்பு 20 தடவைகள் திருத்தப்பட்டு விட்டது. ஆகவே, புதிய அரசமைப்பொன்று அவசியமாகின்றது. அந்த அரசமைப்பு கடந்த காலத்தில்கற்றுக்கொண்டபாடங்களைஅடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும். மீண்டும் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் அது அமைய வேண்டும்.

கேள்வி:- இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக பரிந்துரைக்கப்பட்டுள்ள மிலிந்த மொரகொட பதவியை ஏற்றுக்கொள்வதில் உள்ள தாமதங்கள் என்ன? 13 ஆவது திருத்தம் தொடர்பான அவருடைய நிலைப்பாடு தாமதங்களுக்குக் காரணமாகின்றதா....?

பதில்:- எனக்கு தெரிந்தவரையில் 13 ஆவது திருத்தம் தொடர்பிலான அவருடைய நிலைப்பாடு எவ்விதமான செல்வாக்கையும் செலுத்தவில்லை. இந்தியா அவருடைய நியமனத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. அவர் சில செயற்றிட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி வருகின்றார். ஆகவே, மிக விரைவில் அவர் டெல்லிக்குச் சென்று பதவிகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

கேள்வி:- அமைச்சரவை அமைச்சருக்கான சிறப்பு அந்தஸ்துடன் செல்கின்றாரா....?

பதில்:- இதற்கு முன்னதாக எந்தவொரு நாட்டிற்கான தூதுவருக்கும் அவ்விதமான சிறப்புரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் மிலிந்த மொரகொட தனித்துவமான நபர் என்பதால் ஜனாதிபதியே அவ்விதமான சிறப்புரிமையுடன் அவரை அனுப்பி வைப்பதற்கு தீர்மானித்திருந்தார். அதுதொடர்பான கோரிக்கையும் இந்தியாவிடத்தில் விடுக்கப்பட்டுள்ளது.

கேள்வி: 'சீனாவின் ஒரேபட்டி ஒரே மண்டலம்' முன்முயற்சியின் பங்காளராக இலங்கை இருக்கும் அதேநேரம் அயல்நாடான இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு உள்ளிட்ட இருதரப்பு உறவுகளில் எவ்வாறு சமநிலைத் தன்மையை நிலையாகப் பேணத் திட்டமிட்டுள்ளது?

பதில்: இலங்கையைப் பொறுத்தவரையில் அடுத்த நூற்றாண்டில் கடல் போக்குவரத்து மற்றும் வர்த்தகமே பிரதான வருமானம் ஈட்டும் வாயிலாக இருக்கப் போகின்றது. அவ்வாறான நிலையில் சீனாவின் 'ஒரே பட்டி ஒரேபாதை' முன்முயற்சித் திட்டத்தைப் புறமொதுக்கி விட முடியாது. அதில் பங்குதாரராக இருக்க வேண்டியது கட்டாயமாகின்றது. அதேநேரம், இந்து சமுத்திரப் பிராந்திய கடற்போக்குவரத்தில் மூன்று சர்வதேச துறைமுகங்களைக் கொண்ட கேந்திர நிலையமாக இலங்கை காணப்படுகின்றது.

ஆகவே, இந்தப் பிராந்தியத்தின் கடற்போக்குவரத்து பாதையின் கேந்திரமாக இலங்கை காணப்படுகின்றது. இந்த நிலைமையை நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தவேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. அதற்காக அயல்நாடான இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களை புறமொதுக்குவதாகக் கருதமுடியாது. இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கரையோரப்பகுதிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டுப் படைகளின் பயன்பாட்டிற்கு வழங்கப்படமாட்டா என்பது திடமான விடயமாகும். – என்றார்.

# புர்கா தடை செய்யும் முடிவு; பிரச்சினைகளைத் தீவிரமாக்கும்

## முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை

இலங்கை என்பது சுதந்திரமான நாடாகும். இங்கு ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பத்தின்படி ஆடையணிவதற்கான சுதந்திரம் இருக்கின்றது. அவ்வாறிருக்கையில் புர்காவை தடை செய்வதால் தற்போது காணப்படும் பிரச்சினைகள் மேலும் தீவிரமடையுமே தவிர, அவை தணியப்போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

தற்போதைய அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியே ஆட்சிப்பீடமேறியது. எனினும் அவற்றை நிறைவேற்ற முடியாததன் காரணமாகவே இப்போது புர்காவைத் தடை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

இலங்கை என்பது சுதந்திரமான நாடாகும். இங்கு ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பத்தின்படி ஆடையணிவதற்கான சுதந்திரம் இருக்கின்றது. எனவே, புர்கா அணிவது அல்லது அணியாமல் இருப்பது குறித்து தீர்மானம் எடுப்பது நாட்டு மக்களின் உரிமையாகும். அவ்வாறான மக்களின் ஜனநாயக உரிமையைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதன் விளைவாகப் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. மாறாக பிரச்சினைகள் தீவிரமடையும். அரசாங்கத்தின் தீர்மானங்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகளைக் குறைப்பதற்கு வழிசெய்யும் என்று எமக்குத் தோன்றவில்லை என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, புர்கா என்பது மதரீதியான தீவிரவாதப்போக்கின் அடையாளமாக இருப்பதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளமை தொடர்பில் வினவியபோது அதற்குப் பதிலளித்த முஜிபுர் ரகுமான் –

அது தொடர்பில் சரத் வீரசேகர தீர்மானம் எடுக்கமுடியாது. என்னுடைய பார்வையில் அவர்தான் தீவிரவாதப்போக்கில் செயற்படுகின்றார் போன்று தோன்றுகிறது. அவர் விரும்பும் ஆடையையே நாட்டுமக்கள் அணியவேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் தமது மதரீதியான நம்பிக்கையின்படி அணியும் ஆடைகளைத் தடைசெய்வதே தீவிரவாதப்போக்குடைய சிந்தனையாகும் என்று குறிப்பிட்டார்.

# காணி ஆவணங்கள் யாவும் வடக்கில் இருக்கவேண்டும்!

## காதர் மஸ்தானின் விருப்பமும் இதுவே



காணி ஆவணங்களை கையாளும் அலுவலகம் வடக்கில் இருப்பதே எனது விருப்பம். அதனை உரிய அமைச்சரிடம் வலியுறுத்தியிருக்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா - நெடுங்கேணியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் காதர் மஸ்தான் மேலும் கூறியுள்ளவை வருமாறு - 'எல்.ஆர்.சி. காணிக்குரிய ஆவணங்களே அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அது கடந்த காலங்களிலும் அநுராதபுர பிராந்திய காரியாலயத்தால்தான் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பாக எனது கோரிக்கைக்கு அமையவே வட.மாகணத்துக்கு வந்தது.

மீண்டும் இந்த விடயம் அவசரமாக அங்கு கொண்டுசெல்லப்பட்டமை தொடர்பாக உரிய அமைச்சருடன் பேசியிருக்கிறேன். சில செயற்பாடுகளை இலகுவாகவும் அவசரமாகவும் செய்வது தொடர்பாகச் சில காரணங்கள் அவரால் சொல்லப்பட்டன. அது பொருத்தமில்லாத காரணம் எனக் கூறியிருந்தேன்.

வட மாகாணத்திலேயே இந்தக் காரியாலயம் இருக்கவேண்டும் என்று எனது கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறேன். இங்கு இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடையவிருப்பமும். எனவேமீண்டும்ஒருமுறை அமைச்சருடன் பேசவுள்ளேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதையலில் இருந்து தங்கப் பந்துகள் விற்பனையின் போது இருவர் மாட்டினர்!

புதையலில் இருந்து பெற்ற 50 கிராம் தங்கப் பந்துகள் எனக் கூறி ஹோமாகம பிரதேச மக்களுக்கு விற்பனை செய்ய முயற்சித்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தங்க பந்துகளை இரண்டு லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்த நபர்கள் தங்கப் பந்துகளுடன் அநுராதபுரம் பொலிஸ் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய அநுராதபுரம் விஸயபுர கல்பொத்த வீதி பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் விஜயபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். ஹோமாகமயில் இருந்து மோட்டார் வாகனத்தில் வந்த நால்வர் இதனைப் பெற்றுக் கொண்டு பணம் வழங்க முயற்சித்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் தங்க பந்துகளைச் சோதனையிடும் போது அதில் 86 பந்துகள் காணப்பட்டுள்ளன. அது போலியான தங்க பந்துகளா என இதுவரையில் உறுதி செய்யப்படவில்லை.

அதன் தொல்பொருள் பெறுமதியைப் பெற பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# அசாத் சாலியின் சர்ச்சைக் கருத்து விசாரிக்கக் குழு ஒன்று நியமிப்பு!



முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஷாத் சாலியின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் விசாரிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அஷாத் சாலி, பணம் இருந்தால் நான்கு பெண்களை திருமணம் செய்துகொள்வதில் என்ன தவறு எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்தோடு, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்டார் என்பதற்காக குர்ஆனில் உள்ள சட்டங்களை மாற்றிக் கொள்ள முடியாது என்றும் அவ்வாறு சட்டங்கள் மாற்றப்பட்டாலும் அதனை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறைமையை சட்டங்களால் மாற்றிவிட முடியாது. முஸ்லிம் ஆண் ஒருவர் தனது பண வசதிக்கு ஏற்ற வகையில் பெண்களை திருமணம் செய்து கொள்கின்றார். அதில் எவ்வித தவறும் கிடையாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

செல்வம் இருக்கும் ஓர் ஆண் வசதி குறைந்த சில பெண்களைத் திருமணம் செய்து அவர்களை பராமரிப்பதில் தவறில்லை. முஸ்லிம் சட்டங்களை மாற்றி தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டாம். இனவாத அடிப்படையிலேயே இந்த சட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப் படுகின்றன என அஷாத் சாலி குற்றம் சுமத்தியிருந்தார்.

இதனையடுத்து, முஸ்லிம் சட்டம் தொடர்பில் அசாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி பௌத்த தகவல் மையத்தின் பணிப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் உள்ளிட்ட சிலர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இந்த நிலையிலேயே இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மறை ஆயர் இமானுவேலை சந்தித்தார் சுரேன் ராகவன் எம்.பி.!

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்து, விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டார்.

கடந்த சனிக்கிழமை மதியம், மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்து கலந்துரையாடல்களை மேற்கொண்ட அவர், மன்னார் மறைமாவட்ட ஆயரிடமும் ஆசி பெற்றார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட பின்னர், அவரின் மன்னார் மாவட்டத்துக்கான முதலாவது விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் மறைமாவட்ட ஆயருடனான சந்திப்பின்போது, மன்னார் மக்களின் பொருளாதார நிலையை எவ்வாறு உயர்த்தலாம் என்றும் இந்தியாவுக்கும் தலைமன்னாருக்குமிடையில் கப்பல் சேவையைப் ஆரம்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளை, மீண்டும் அழைத்து வருகின்றமை தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் உதவிகள் தொடர்பாகவும் மன்னாரிலுள்ள கனிய வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டத்தின் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றும் பொதுக்கொள்கையொன்றை உருவாக்குவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு அதுவே கொள்கை என்கிறார் விக்கி



தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு – அதுவே தங்கள் கொள்கை என்று தெரிவித்திருக்கின்றார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தமது 'வாரத்துக்கொரு கேள்வி – பதில்' அறிக்கையிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கேள்வி:- உங்கள் கட்சி பதிவு பெற்றதாகப் பத்திரிகையில் செய்தி படித்தேன். உங்கள் கட்சி மற்றக் கட்சிகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

பதில்:- இன்னமும் பதிவு பெறவில்லை. பதிவு பெறக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. எமது தமிழ் மக்கள் கூட்டணியை எடுத்துக் கொண்டால் நாங்கள் எவருமே பாரிய புத்திசாலிகள், கெட்டிக்காரர்கள், திறமைசாலிகள் என்று பெயர் எடுத்தவர்கள்அல்லர். நாங்கள் மிகச் சாதாரணமானவர்கள். அரசியலுக்குப் புதியவர்கள்.

எங்களுக்கிருக்கும் ஒரேயொரு பொது குணாதிசயம் தான் நாங்கள் எங்கள் மக்கள் மீது அன்பு கொண்டிருக்கின்றோம் என்பது. அந்த அன்புதான் எங்கள் பலம்.

ஒரு மானிடரின் வாழ்வைப் பரிசீலித்துப் பார்த்தார்களானால் அவரின் சிந்தனையில் இருந்து சித்தாந்தம் வரையிலான அவரின் வாழ்வுமுறையே வாழ்க்கை என்று குறிப்பிடப்படுகின்றது. சிந்தனையில் இருந்து பிறப்பது சொல். சொல்லில் இருந்து பிறப்பது செயல். ஒருவரின் சிந்தனை, சொல் மற்றும் செயல்களின் வாயிலாக அவர் பிரதிபலிப்பதுதான் அவரின் சித்தாந்தம். இதிலே வழி நெடுகலும் தூய்மை வேண்டும். சிந்தனையில் தூய்மை, சொல்லில் தூய்மை, செயலில் தூய்மை.

இவ்வாறு வாழ்ந்தால் எமது சித்தாந்தமும் தூய்மை பெறும். அதை விட்டு அசிங்கமான சிந்தனைகளோ, சொற்களோ அல்லது செயல்களோ எம்மை பீடித்துக் கொண்டால் எமது வாழ்க்கை கேள்விக் குறியாகி விடும்.

அரசியல் என்பது குறிக்கோள்களைக் கொண்டது. ஆகவே சித்தாந்தத்தை மையமாக வைத்தே அரசியல் நடைபெறுகின்றது, நடைபெற வேண்டும். எமது கட்சியின் சித்தாந்தம் என்ன என்று கேட்டால் மக்கள் சேவையேயாகும். எல்லோரும் மக்கள் சேவை செய்கின்றோம் என்றுதானே கூறுகின்றார்கள் என்று கேள்வி கேட்பீர்கள். இங்குதான் தூய்மை என்பது அவசியம். மக்கள் சேவை என்று கூறி சுயநல அபிவிருத்தியே குறிக்கோளாக இருப்பவர்களின் சித்தாந்தம் தூய்மையற்றது. பின்நோக்கிச் சென்றால் அவர்கள் செயலில் தூய்மை இருக்காது, சொல்லில் தூய்மை இருக்காது, சிந்தனையில் தூய்மை இருக்காது. சுயநலமே எல்லாவற்றையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும்.

ஆகவே மிகச் சாதாரண மக்களாகிய எங்கள் கட்சி அங்கத்தவர்கள் அன்புக்கும், தூய்மைக்கும் முதலிடம் கொடுப்பவர்கள். தங்கள் மக்கள் மீது அதீத அன்பும் நம்பிக்கையும் கொண்டவர்கள். நெஞ்சிலே தூய்மையைச் சுமந்து செல்பவர்கள்.

இந்தத் தூய்மையின் வெளிப்பாடாகவே நாம் எமது தேர்தல் செலவுகள் பற்றிய முழுமையான கணக்கறிக்கையை மக்கள் முன்வைத்தோம். அரசியலுக்காக எம் மீது பொய்யான குற்றங்களை சுமத்துபவர்கள் மீது நாம் கோபம் கொள்வதில்லை. பரிதாபப்படுகின்றோம். உண்மை என்பது ஆயிரம் பொய்களுக்கு மத்தியிலும் தனித்து ஜொலிக்கக் கூடியது.

இந்த இடத்தில் இருந்து மேலும் சற்று முன்னோக்கிச் செல்ல விரும்புகின்றேன். எமது அரசியல் சித்தாந்தம் தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு என்று அறிந்திருப்பீர்கள். அதனை மையமாக வைத்து எமது கட்சி பயணிக்கின்றது.

எம்மை நாமே ஆள்வது சுயநிர்ணய உரிமை பாற்பட்டது. சுயநிர்ணய உரிமையை எங்கள் அரசியலில் முதனிலைப்படுத்தியுள்ளோம். தன்னாட்சி என்பது அதனையே. எமது மக்கள் தங்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் நாங்கள். ஆகவே பிச்சைப் பாத்திரம் ஏந்தாமல் எம்மை நாமே விருத்தி செய்து கொள்ள, அபிவிருத்தி அடைய, எம் மக்களை நாம் நாடி அவர்களுக்குத் தம் மீது நம்பிக்கை கொள்ளச் செய்து, சமூக அபிவிருத்திக்கு அடிகோலுபவர்கள் நாங்கள். தேர்தல்களில் வென்றாலும் தோற்றாலும் சமூகப் பணி தொடர்ந்து கொண்டு தானிருக்கும்.

'ஒருவருக்கு மீனைக் கொடுப்பதிலும் பார்க்க மீன் பிடிக்க அவருக்குச் சொல்லிக் கொடு. அவரின் வாழ்க்கை பூராகவும் அது அவருக்கு நன்மையை பெற்றுத் தரும்' என்றார் அரிமா சங்கத்தின் தலைவரொருவர் பல வருடங்களுக்கு முன். அவ்வாறான தற்சார்பு முயற்சிகளில் எமது மக்கள் ஈடுபட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

சில காலத்திற்கு முன் – அதாவது கொரோனா எம்மைத் தாக்க வந்த காலத்தில் – நான், இனி வருங்காலங்களில் பொருள்களின், மரக்கறிகளின் விலைகள் உயரும் என்று கண்டு எம் மக்களை வீட்டுத் தோட்டங்களில் ஈடுபடுமாறு வேண்டிக் கொண்டேன். பலர் வீட்டுத்தோட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். நான் வெறுமனே இதைக் கூறிவிட்டு இருக்கவில்லை. பல மரக்கறி வகைகள் என் வீட்டுத் தோட்டத்தில் தொட்டிகளில் வளர்கின்றன. கத்தரி, போஞ்சி, வெண்டை, அவரை, புடலங்காய் போன்ற மரக்கறிகளும், மிளகாய், கீரை வர்க்கங்களும் தற்போது எமக்கு எமது வீட்டுத் தோட்டத்தில் இருந்தே கிடைக்கின்றன. எமது திருநெல்வேலி அலுவலகத்தில் மரவள்ளி, வாழை பெருமளவில் நாட்டியிருக்கின்றேன். மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் நாங்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்க வேண்டும். எமது கட்சியின் சிறப்புக்களில் இதுவும் ஒன்று.

அடுத்து தன்நிறைவு. இது ஒட்டுமொத்தத் தமிழ் பேசும் மக்களிடையே வளர வேண்டிய ஒரு கருத்தாகும். ஏன் சிங்கள மக்களையும் மற்றையவர்களையும் கூட இந்தக் குறிக்கோளுடன் இணைத்துக் கொள்ளலாம். எம்மால் உள்நாட்டில் வளர்க்கக் கூடிய, செய்யக் கூடிய, தயாரிக்கக் கூடியவற்றை நாம் இங்கு தயாரித்து தன்நிறைவு பெற்று அதிகப்படியானவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டும். எந்த ஒரு பொருளுக்கும், பண்டத்திற்கும் வெளிநாடுகளில் இருந்து அவற்றை எதிர்பார்க்கும் பழக்கத்தை நாங்கள் கைவிட வேண்டும். என் நண்பரொருவர் உலக வங்கி நிபுணர்.

நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் நெற்பயிரை வடமாகாண விவசாயிகள் பயிர் செய்வதை அவர் கண்டித்து வெளிநாட்டில் இருந்து குறைந்த விலைக்கு வாங்கக் கூடிய நெல்லை ஏன் வீணாகக் கூடிய விலையில் இங்கு பயிரிடுகின்றீர்கள்? உங்களுக்கு நட்டம் தரும் நடவடிக்கைகளில் ஏன் ஈடுபடுகின்றீர்கள் என்று கேட்டார்.

அதற்கு நான், எங்களை, எங்கள் பாரம்பரியத் தொழிலில் ஈடுபட வைக்க பல காரணங்கள் உண்டு என்றேன்.

ஒன்று – வெளிநாட்டு அரிசி எமக்கு ஏற்றதல்ல. தாய்லாந்து வெள்ளை அரசியை எங்கள் மக்கள் விரும்புவதில்லை. சிவத்த உள்ளூர் அரிசியையே நாடுகின்றார்கள்.

இரண்டு – போர், நோய், பொருளாதாரப் பின்னடைவுகள் போன்றவற்றின் காரணமாக உலக ரீதியாகத் தாக்கங்கள் ஏதும் ஏற்படும் போது எம் மக்கள் பட்டினி கிடக்க வேண்டி வரும் என்றேன். நாங்கள் எமது உணவில் தன்னிறைவு காண வேண்டும் என்றேன். 'நெற்பயிரிடுகைளில் நாங்கள் நவீன முறைகளைக் கையாளலாம். பெறுமதியைக் கூட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால் நெற்பயிர்ச் செய்கையை நிறுத்தி மறு பயிர்ச் செய்கையில் ஈடுபடுவது சரியென்று எனக்குப்படவில்லை' என்றேன். கொரோனா அண்மையில் எனது கூற்றை மெய்ப்பித்திருந்தது. ஆகவே தன்னிறைவு பெறுவது எமது முக்கிய ஒரு குறிக்கோளாக இருக்க வேண்டும். அதற்காக நாம் உழைக்க வேண்டும். கட்சியாக நாங்கள் அவ்வாறு உழைத்து வருகின்றோம்.

எமக்கு கொள்கைகள் உண்டு. அங்கத்தவர்களின் ஆர்வம் நிறைய உண்டு. எம் மக்கள் மீது அன்பும் கரிசனையும் உண்டு. சிந்தனையில் தூய்மையுண்டு. இதைக் கண்டதால் எம் மக்களின் நிதி உதவியும் உண்டு. இவை தான் எமது விசேட குணவியல்புகள்.

காலைக்கதிர் Kalaikkathir



- முருகபூபதி -

எழுத்தாளர் முருகபூபதி வரையும் **'எழுத்தும் வாழ்க்கையும்!'** தொடரின் அங்கம் 32 இன்று இங்கு பிரசுரமாகின்றது.

'ஊருக்கு நல்லது சொல்வேன் எழுதியவரின் பின்னணியில் சொல்லவேண்டிய செய்திகள்' – என்ற மகுடத்தில் ஊடகவியலாளர் தனபாலசிங்கம் குறித்து அவர் வரைந்த கட்டுரை இது.

# ஊடகவியலாளர் தனபாலசிங்கமும் தமிழ்ப் பத்திரிகை உலகமும்



கொழும்பில், கொம்பனித்தெரு பிரதேசத்தில் மக்கள் பிரசுராலயம் என்ற புத்தகக்கடை இருந்தது. அங்கும் பொரளை கொட்டா வீதியில் அமைந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமைக் காரியாலயத்திலும் ஒரு புத்தகக்கடை இயங்கியது.

இங்கு சோவியத் இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு நூல்களை பெறலாம். அத்துடன் சோவியத் தகவல் பிரிவில் பணியாற்றிய ராஜகுலேந்திரன் என்ற நண்பரும் எனக்கு பல சோவியத் இலக்கிய நூல்களை தருவார்.

மாக்சிம்கோர்க்கி, அன்டன் செக்கோவ், தாஸ்தாவஸ்கி, டால்ஸ்டாய், முதலானோரின் படைப்புகளும் வாசிக்கக்கிடைத்தன.

வீரகேசரிக்கு பணிக்குச்செல்லும் போது நான் எடுத்துச்செல்லும் பேக்கில் வீட்டில் தந்துவிடும் சாப்பாட்டுப் பொதியுடன், ஏதாவது ஒரு புத்தகமும் இருக்கும். பஸ் பயணத்தில் அமருவதற்கு ஆசனம் கிடைத்தால் படிப்பேன்.

சில சமயங்களில் மல்லிகை இதழும் எனது பேக்கில் இருக்கும். வீரகேசரி ஒப்புநோக்காளர் பிரிவுக்கு நான் தெரிவு செய்யப்பட்ட காலத்தில், வடக்கில் கரவெட்டியிலிருந்து வந்து இணைந்துகொண்ட வீரகத்தி தனபாலசிங்கம், எப்பொழுதும் தலைகுனிந்தவாறு அமைதியாகத்தான் இருப்பார். அதிகம் பேசவும்மாட்டார்.

என்னிடம் சோவியத் பிரசுர நூல்கள், மல்லிகை இருப்பதை பார்த்துவிட்டு, அவற்றை வாசிப்பதற்கு கேட்பார். அவ்வாறுதான் நாம் நண்பர்களானோம்.

அவர் வீரகேசரி விளம்பரப் பிரிவில் முக்கிய பொறுப்பில் இருந்த கந்தசாமியின் சகோதரியின் மகன். எனினும் கந்தசாமியுடனும், தனபாலசிங்கம் அவசியமின்றி பேசமாட்டார்.

அவ்வாறு அமைதியாக 1977 - 1978 காலப்பகுதியில் மௌனத் தவமியற்றிய தனபாலசிங்கம்தான், பின்னாளில் வீரகேசரி துணை ஆசிரியராகவும், அதன் பிறகு தினக்குரல் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும், காலப்போக்கில் அதன் பிரதம ஆசிரியராகவும், பின்னர் மீண்டும் வீரகேசரியில் சிரேஷ்ட ஆசிரியராகவும் உயர்ந்தார்.

தற்போது, சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு ஆளாகவேண்டிய நிலையில் வீட்டில் ஓய்வில் இருக்கிறார்.

1977 ஆம் ஆண்டுமுதல் எனது நெஞ்சத்துக்கு நெருக்கமான நண்பர் தனபாலசிங்கம், விரைவில் பூரண குணமடையவேண்டும் என பிரார்த்தித்தவாறே இந்தப்பதிவை தொடருகின்றேன்.

தனபாலசிங்கத்திற்கு பத்திரிகைத் தொழில் எதிர்பாராமல் நேர்ந்த விபத்து என்றுதான் கூறவேண்டும். பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியில் க.பொ.த. (உயர்தரம்) வரையில் படித்துவிட்டு, தரப்படுத்தலினால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பையும் இழந்து, தோழர் சண்முகதாசனின் தலைமையில் இயங்கிய இலங்கை கம்யூனிஸ்ட் ( பீக்கிங் சார்பு ) கட்சிப் பணிகளில் அலைந்து கொண்டிருந்தவரை பெற்றோர்கள் கொழும்புக்கு ரயிலேற்றிவிட்டார்கள்.

அதன்பின்னர் 1977 ஆம் ஆண்டு முதல் தனபாலசிங்கம் கொழும்புவாசியாகி விட்டவர்.

வீரகேசரி ஒப்புநோக்காளர் பிரிவில் தனபாலசிங்கம், என்னுடன் உலக அரசியல் முதல் இலங்கை அரசியல் வரையில் பேசுவார்.

நானும் இடதுசாரிகளுடனும் முற்போக்கு எழுத்தாளர்களுடனும் அலைந்து கொண்டிருந்தமையால், தனபாலசிங்கம் என்னுடன் நெருக்கமானார்.

ஒரு நாள் அவரை, ஆமர்வீதி சந்தியில் மக்கள் விடுதலை முன்னணி தலைமைக்காரியாலயத்திற்கு அழைத்துச் சென்று செயலாளர் தோழர் லயனல் போப்பகே அவர்களுக்கு அறிமுகப்படுத்தினேன்.

அவருக்கு தமிழ் தெரியாது, தனபாலசிங்கத்திற்கு சிங்களம் தெரியாது. இடையில் நான் மொழிபெயர்ப்பாளராகி அவஸ்தைப்பட்டதையடுத்து, இருவரும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் செஞ்சக்தி பத்திரிகைக்கு தனபாலசிங்கத்திடமிருந்து ஆக்கங்கள் பெற்று பிரசுரித்தேன்.

வடபுலத்தில்நிலவியசாதீயஒடுக்குமுறையில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் அணுகுமுறை குறித்து எழுதினார்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் சில கவிதைகளையும் பெற்று செஞ்சக்தியில் வெளிவரச்செய்தேன்.

புதுவையும் சீனச்சார்பு நிலைப்பாடு எடுத்தவர். செ. கணேசலிங்கனின் குமரன் இதழ்களிலும் வரதபாக்கியான் என்ற




புனைபெயரில் எழுதினார்.

எனது இந்த எழுத்தும் வாழ்க்கையும் தொடர் தற்போது 1977 - 1987 காலப்பகுதியை சித்திரிக்கிறது. இந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையில் பல அரசியல் - சமூக - பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்தன.

1977 - 1981 - 1983 ஆகிய மூன்று ஆண்டுகளில் எங்கள் தாயகம் கலவரங்களையும் யாழ். பொது நூலக எரிப்பையும், வெலிக்கடை சிறை படுகொலைகள் உட்பட ஏராளமான தாக்குதல் சம்பவங்களையும், இயக்க மோதல்களையும், சகோதரப்படுகொலைகளையும், கண்டது.

இக்காலப்பகுதியில் வீரகேசரியில் என்னுடன் அரசியல் பேசுவதற்கு சிறந்த தெரிவாக இருந்தவர் நண்பர் தனபாலசிங்கம்.

என்னையும் தனபாலசிங்கத்தையும் முழுநேர ஊடக வாழ்க்கைக்கு திசை திருப்பியவர் நண்பர் ஆ. சிவநேசச்செல்வன். தற்பொழுது கனடாவில் வதியும் அவர் 1983 இல் வீரகேசரியில் பிரதம ஆசிரியருக்கு வெற்றிடம் வந்தபொழுது, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நூலகராக இருந்துவிட்டுவந்து இணைந்து கொண்ட விரிவுரையாளர்.

அவரை எனக்கு ஏற்கனவே கைலாசபதி யாழ். பல்கலைக்கழகத்தில் தலைவராக இருந்தபொழுது நடத்திய தமிழ் நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கு காலத்திலிருந்து நன்கு தெரியும். அவர் வீரகேசரியில் இணையும்பொழுது நானும் ஆசிரிய பீடத்திலிருப்பதாகத்தான் நம்பிக்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டார். ஆனால், அவர் பதவியேற்ற முதல் நாள் ஒரு திங்கட்கிழமை. அன்று எனக்கு விடுமுறைநாள். என்னைத் தேடியிருக்கிறார்.

நான் ஆசிரிய பீடத்தில் இல்லை, ஒப்புநோக்காளர் பிரிவில் இருப்பது, அறிந்து மறுநாள் நான் பணிக்கு வந்ததும் தமது அறைக்கு அழைத்து உரையாடிவிட்டு முகாமையாளருடன் கலந்துபேசி எனக்கு எந்த நேர்முகப்பரீட்சையும் நடத்தாமல் துணை ஆசிரியராக இணைத்துக் கொண்டார். அன்று முதல் அவருடனும் இதர ஆசிரிய பீடத்தவர்களுடனும் தொடர்ச்சியாக சகோதர வாஞ்சையுடனான நட்புறவை இன்று வரையில் பேணிவருகின்றேன்.

பிரதம ஆசிரியர் சிவநேசச்செல்வன் அப்பொழுது செய்தி ஆசிரியர் 'நடா' நடராஜா, வாரவெளியீட்டுக்குப் பொறுப்பாசிரியர் பொன். ராஜகோபால் ஆகியோரின் நம்பிக்கைக்குரிய ஊடகவியலாளனாக பணிதொடர்ந்த பொழுது ஒரு நாள் நண்பர் தனபாலசிங்கம் பற்றி சிவநேசச்செல்வனிடம் பிரஸ்தாபித்தேன். தோழர் 'பீக்கிங்' சின்னதம்பியின் மருமகன் முறையான தனபாலசிங்கத்திடம் நல்ல ஆற்றல் இருக்கிறது. நிறைய வாசிப்பவர். அவரையும் பயன்படுத்துங்கள் என்றேன். சிவநேசச்செல்வனுக்கு பீக்கிங் சின்னத்தம்பியையும் நன்கு தெரியும். நான் சொல்லி மறுகணம்தனபாலசிங்கத்தைதமது அறைக்கு அழைத்தார். தனபாலசிங்கமும் ஆசிரியபீடத்துக்கு வரப்போவது அறிந்த அங்கிருந்த சிலர் முகம் சுழித்தனர்.

தொடர்ந்தும் ஒப்புநோக்காளர் பிரிவிலிருந்து ஆள்களை ஆசிரியபீடத்திற்கு எடுத்தால் தமது இமேஜ் பாதிக்கப்பட்டு விடும் என்ற தயக்கம்தான் அந்த முகச் சுழிப்புக்குக் காரணம்

ஏற்கனவே ஸி.எஸ். காந்தி என்பவரையும் ஆசிரியபீடம் ஒப்புநோக்காளர் பிரிவிலிருந்து எடுத்திருந்ததை அவர்கள் மறந்திருந்தார்கள்.

காந்தி, மூத்த மலையகப்படைப்பாளியும் தொழிற்சங்கவாதியும் முன்னாள் சட்டசபை உறுப்பினருமான எழுத்தாளர் சி.வி. வேலுப்பிள்ளையின் நெருங்கிய உறவினர். அத்துடன் கவிஞர். முன்னர் அந்த ஆசிரியபீடத்தில் அன்ரன் பாலசிங்கம், கலாநிதி காசிநாதன், எழுத்தாளர்கள் சட்டநாதன், செ. கதிர்காமநாதன் ஆகியோரும் பணியாற்றியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் மகாகவி பாரதியாரின் நெருங்கிய நண்பராக விளங்கி வ.ரா. அவர்களும் ஆசிரியராக பணியாற்றியிருக்கிறார்.

புதுமைப்பித்தனுக்கும் ஒரு சந்தர்ப்பம் வந்தது. ஆனால், அவர் தமது குடும்பத்தை விட்டு இலங்கை வருவதற்கு விரும்பவில்லை. இப்படி ஒரு பாரம்பரியமும் நீண்ட வரலாறும் கொண்ட வீரகேசரியில் நான் 1983 இலும் நண்பர் தனபாலசிங்கம் 1984 இலும் ஆசிரியபீடங்களுக்குள் பிரவேசித்தோம்.

வட - கிழக்கில் நீடித்துக்கொண்டிருந்த போர் நடவடிக்கை தொடர்பான செய்திகளை நான் எழுதியபொழுது, தனபாலசிங்கம் வெளிநாட்டுச் செய்திச்சேவைகளான பி.ரி.ஐ. - ரோய்டர் முதலானவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் ஆங்கிலச்செய்திகளை மொழிபெயர்த்துக்கொடுத்தார்.

தனபாலசிங்கம் அழகாக மொழிபெயர்ப்பார். இவருடைய மொழிபெயர்ப்பினால் கவரப்பட்ட ஒருவர் அடிக்கடி வீரகேசரி அலுவலக வாசலில் தோன்றுவார். ஆனால், உள்ளே வரமாட்டார். அதற்கு வேறும் சில காரணங்கள் இருந்தன என்று தற்பொழுது கனடாவில் வதியும் முன்னாள் வீரகேசரி விளம்பர - விநியோக முகாமையாளர் திரு. து. சிவப்பிரகாசம் சொல்வார்.

அந்த மனிதர்தான் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் தலைவர் குமார் பொன்னம்பலம். தாம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எடுத்துவந்து தனபாலசிங்கத்திடம் கொடுத்து மொழிபெயர்த்து வாங்கிச்செல்வார்.

இந்தத்தொடர்பையும் எனக்கு உதவி செய்வதற்காக தனபாலசிங்கம் பயன்படுத்தியிருக்கிறார். அரியாலையைச்சேர்ந்த எனக்குத் தெரிந்த ஒரு இளைஞர் தடுப்புக்காவலில் இருந்தபொழுது அவரை விடுவிக்க சில சட்ட ஆலோசனைகளை குமார்பொன்னம்பலத்திடம் அழைத்துச்



சென்று பெற்றுக்கொடுத்தார்.

தனபாலசிங்கம் எனக்குச்செய்த மற்றும் ஒரு முக்கிய உதவியை மறக்கவே முடியாது.

(மிகுதி நாளை)

# கொரோனாத் தடுப்பூசி ஏற்றிய 30 பேருக்கு குருதி உறைவு; பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் அதிர்ச்சித் தகவல்



இலங்கையில் கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களில் இதுவரை 30 பேருக்கு குருதி உறைதல் ஏற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்த சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர் ஏற்படும் சிக்கல் நிலைமைகள் தொடர்பாக, சுகாதாரத்துறை அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நாடு முழுவதும் சுகாதார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் கொரோனா நோயைத் தடுப்பதற்காக கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் சில ஒவ்வாமைத் தன்மைகள் தொடர்பாக அறிக்கையிடப்படுகின்றன.

அதன்படி, 30 பேருக்கு குருதி உறைதல் ஏற்பட்டுள்ளது. அதுதவிர, காய்ச்சல் மற்றும் உடல் வலி போன்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. அவை சாதாரணமானவை என தொற்றுநோய் விஞ்ஞான பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் இலங்கையில் பதிவான இந்த எண்ணிக்கை, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்தளவானது எனக் குறிப்பிடலாம் என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

# கந்தளாய் சீனி ஆலை காட்டுப் பகுதியில் யானையொன்று இறந்த நிலையில் மீட்பு!



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் சீனி ஆலை காட்டுப் பகுதியில் காட்டு யானையொன்று இறந்த நிலையில் வன ஜீவராசி அதிகாரிகளால் கடந்த சனிக்கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் சீனி ஆலை காட்டுப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்றவர்களால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய இறந்த காட்டு யானையை வன ஜீவராசி அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இருபது வயதுடைய காட்டு யானையொன்றே உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வன ஜீவராசி அதிகாரிகளால் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளதா அல்லது ஏதாவது காயங்கள் காரணமாக இறந்துள்ளதா போன்ற பரிசோதனைகளை திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்றார்கள்.

# வீதியைக் கடக்க முற்பட்டவர் சம்பவ இடத்திலேயே சாவு!

புத்தளம், மார்ச் 15

புத்தளம் பாலாவி பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். வீதியைக் கடக்க முற்பட்ட போது கார் ஒன்று மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டையிலிருந்து அநுராதபுரம் சென்றவேளை புத்தளம் பாலாவி பகுதியிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவட்ட ரீதியாக சடலம் புதைப்பு!

கொரோனாத் தொற்று காரணமாக மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய மாவட்ட ரீதியில் காணிகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருத்தமான காணிகள் தொடர்பில் தாமதமின்றி அறிவிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ள விடயங்களை உள்ளடக்கிய பொருத்தமான காணியைத் தெரிவுசெய்யுமாறே மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைக்கப்படும் இடங்கள் கொரோனாத் தொற்றால் மரணிப்போரின் உடல்களை அடக்கம் செய்வதற்குப் பொருத்தமான இடமா? என்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஆராயப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

தற்போது மட்டக்களப்பு, ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் சுமார் 40 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, கொரோனாத் தொற்று காரணமாக மரணிக்கும் காலி மாவட்ட முஸ்லிம்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கு காலி மாவட்டத்தில் 4 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த 4 இடங்களின் பெயர்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் காலி மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக காலி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மொஹமட் சகுர்தீன் தெரிவித்தார்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம், திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா ஆகிய பகுதிகளிலும் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

# இலங்கை முஸ்லிம் எதிர்கொள்ளும் பிரச்சினை; ஆவணப் படமாக ஜெனிவாவில் வெளியீடு!

ஜெனிவா, மார்ச் 15

இலங்கை சிறுபான்மை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் மனிதஉரிமைமீறல்கள்உள்ளடங்கிய ஆவணப்படமொன்றுகடந்தவெள்ளிக்கிழமை ஜெனிவாவில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் அன்று தொடக்கம் இன்று வரையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும்வகையில் 'கண்ணீர் நிறைந்த பாதை' என்ற 40 நிமிட ஆவணப்படமாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மனித உரிமை சபையின் தலைவர் முயீஸ் வஹாப்தீன் இந்த ஆவணப்படத்தை இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பின் ஐ.நாவிற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும் தூதுவருமான நஸீமா பக்லி மற்றும் ஐ.நாவின் இலங்கைக்கான முன்னாள் வதிவிட இணைப்பாளர் டேவிட் வலி ஆகியோரிடம் நேரடியாகக் கையளித்தமையுடன் மனித உரிமையுடன் சம்பந்தப்பட்ட ஏனையவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கூறும் ஆவணப்படம் சமர்ப்பிக்கப்பட்டது வரலாற்றின் இதுவே முதல் தடவையாகும்.

அத்துடன், இலங்கைச் சிறுபான்மையினர் எதிர்கொண்ட சவால்களை உள்ளடக்கிய சுமார் 360 பக்கங்களைக் கொண்ட அறிக்கையும் இவர்களிடம் கையளிக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில் இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பல நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கோஷங்களை முன்வைத்து வருகின்றனர்.



அதே நேரம் பல நாடுகளாலும் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகளுக்கு விரைவில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. மேலும் இதில் 57 நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளின் வாக்குகள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் ஏற்றப்பட்டுள்ளது புலிகளின் கொடி!

## சிங்கள ஊடகம் விசனம்

கொழும்பு, மார்ச் 15

தற்போது நடைபெற்றுவரும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் பங்கேற்றுள்ள அதிகாரிகள் மனித உரிமைகள் பேரவையில் விடுதலைப்புலிகளின் கொடியை ஏற்ற அனுமதித்துள்ளனர் எனத் தென்னிலங்கை ஊடகமொன்று விசனம் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்திருந்தாலும், சுவிஸ்பொலிஸார்விடுதலைப்புலிகளின் கொடியை ஏற்றுவதை நிறுத்தவில்லை.

விடுதலைப்புலிகளின் கொடி மனித உரிமைகள் பேரவையின் முன்னுள்ள ஒரு சுரங்க சின்னம் அருகே ஏற்றப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையும் விடுதலைப்புலிகளின் கொடியை ஏற்றியதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஜெனிவா நகரில் விடுதலைப்புலிகள் அமைப்பின் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்படவில்லை என்பதுடன் அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் விடுதலைப்புலிகளின் கொடிகளுடன் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. - என்றும் அது தெரிவித்துள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## பல கீரைகள் பல சத்துகள்

அகத்திக் கீரையைப் பெற விதையை ஊன்றி வைத்தால் வளரும்.

ஒரு முருங்கைக் கிளையை நட்டு வைத்தால் முருங்கைக் கீரையுடன் காய்களும் கிடைக்கும்.

ஒருமுறை விதையை ஊன்றி வைத்தால் பாலக் கீரை கிள்ளக்கிள்ள வளர்ந்து கொண்டேயிருக்கும். பொன்னாங்காணி, சிலோன் பருப்புக் கீரை, பாலக் கீரை, வல்லாரை, புதினா போன்றவற்றையெல்லாம் ஒரு முறை நட்டுவைத்தால் போதும். வேண்டும் போதெல்லாம் கிள்ளியெடுத்துச் சமையல் செய்யலாம்.

சர்க்கரைவள்ளிக் கிழங்கை நட்டுவைத்தால், அதிலிருந்தும் கீரை கிடைக்கும். இந்தக் கீரையைக் கூட்டு செய்து உண்ணலாம். பலவகைக் கீரைகளை மாடித் தோட்டத்தில் வளர்ப்பதால், நாள்தோறும் ஒரு கீரையைப் புத்தம் புதிதாகப் பறித்துச் சமைத்து உண்ணலாம். உடல்நலமும் நல்வாழ்வும் பெறலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக 13இன் முழு நடைமுறையாக்கம்

## இந்தியத் தூதரிடம் சாணக்கியன் வலியுறுத்து



திருகோணமலை,மார்ச் 14

தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக 13ஆவது திருத்தச் சட் டத்தை முழுமையாக அமுல்படுத்தி, அதன்மூலம் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், இதன் மூலம் காணி சர்ச்சைகள் உட்பட பல பிரச்சினைகளுக்கு நாமே தீர்வைப் பெற முடியும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் தெரிவித்திருக்கின்றார்.

இந்திய உயர்ஸ்தானிகரை நேற்று திருகோணமலையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

வடக்கு,கிழக்கு மற்றும் மட்டக்களப்பு மாவட்டம் சம்பந்தமான பல விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

முக்கியமாக தமிழ் மக்களின் காணி அபகரிப்பு, தொல்பொருள் மற்றும் மகா வலி திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்தும் இந்திய தூதுவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அத்துடன் எமக்கான ஆரம்பப் புள்ளியாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழு மையாக அமுல்படுத்தி, அதன் மூலம் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இதன்மூலம் இவ்வாறான காணிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நாமே தீர்வை பெற முடியும் என்பது தொடர்பாகவும் இரா.சாணக்கியன் வலியுறுத்தியிருந்தார்.

எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தகவல் தொழில்நுட்ப துறையை வடக்கு, கிழக்கில் நிறுவுவதற்கான பரிந்துரையினையும் இந்த சந்திப்பின் போது அவர் முன்வைத்திருந்தார்.

இதன் மூலம் பல இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்க முடியும் என்பதனையும் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் காங்கேசன் துறை போன்ற இடங்களில் துறைமுகங்களை உருவாக்குவதன் மூலம் இலங்கை – இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இங்குள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் மட்டக்களப்பு விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க இந்தியா அழுத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும், உள்ளூர் பயண சேவைகளை இதன்மூலம் உருவாக்குவதோடு சென்னைக்கான பயண கட்டமைப்புக்களை இங்கிருந்து ஏற்படுத்துவதன் மூலம் உல்லாசப் பிரயாண துறையை மேலும் அபிவிருத்தி செய்வதோடு இதன் மூலம் பல தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம் என்றார் அவர்.

சமகால அரசியல் விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது ஆராயப்பட் டதாகத் தெரிவித்த இரா.சாணக்கியன், இச்சந்திப்பு எமது மக்களுக்கான எதிர்கால மாற்றத்தின் முதல் படி எனவும் குறிப்பிட்டிருந்தார்.

# சகோதரிகளின் கணவன்மார் ஒரே விபத்தில் பரிதாபச் சாவு



மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, சிறுநாவற்குளம் பகுதியில் ஞாயிறு மதியம் 1 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இரு இளம் குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ளனர்.

அந்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நின்ற பனை மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன் போது சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவரும் பின்னர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

அவர்கள் செட்டிகுளத்திற்கு மரண சடங்கொன்றிற்குச் சென்று விட்டு மீண்டும் மன்னார் நோக்கி வீடு திரும்பிய போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளைத் திருமணம் செய்த 36 மற்றும் 38 வயது இளைஞர் களே இந்த விபத்தில் பலியாகியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இந்த விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பண்ணைக் கடற்கரையில் துப்புரவுப் பணியில் பொலிஸார்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்ச் 14

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித்லியனகேயின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ்ப்பாணம் பொலிஸாரினால் யாழ்.பண்ணை கடற்கரைப்பகுதி துப்புரவு செய்யும் பணி இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது .

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி பிரசாத் பெர்னான்டோ தலைமையில் யாழ்ப்பாண பொலிஸ் உத்தியோகத்தர்களினால் அந்தப் அணி முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் நீண்ட காலமாக பிளாஸ்டிக் மற்றும் ஏனைய கழிவுப்பொருள்கள் அகற்றப்படாமல் மிகவும் அசுத்தமாக காணப்பட்டது. யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவ்வீதியால் பயணித்த போது அதனை அவதானித்து இன்றைய தினம் அதனை பொலிஸார் மூலம் சுத்தப்படுத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு இணங்க இன்றைய தினம் துப்புரவு பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பணியில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் பங்கு கொண்டார்கள்.

# சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்கிறது

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் 7 ஆவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமக் கான தீர்வு வழங்கப்படாத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்பு போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டம் இடம்பெறுகின்ற இடத்திற்கு ஒரு சில தமிழ் அரசியல் பிரதிநிதிகள் வருகைதந்திருந்த போதிலும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் எவரும் இதுவரை வருகை தரவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரம், புலமைப் பரிசில் பரீட்சைகள் ஒத்திவைப்பு!

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இடம்பெறவிருந்த கல்வி பொதுத்தராதர உயர்தர மற்றும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளை ஒத்திவைப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா அச்சம் காரணமாக பாடத்திட்டங்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாத்திற்குள் நிறைவு செய்வது சவாலானது என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# காட்டு யானைகளின் தாக்குதலில் 24 மணி நேரத்தில் மூவர் மரணம்!

கடந்த 24 மணித்தியாலங்களில் காட்டு யானை தாக்கியதில் மூவர் உயிரிழந்துள்ள னர்.

புத்தளத்தில் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுமார் 30 வருடங்களாக காட்டுயானை பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

இன்று அதிகாலை நகருக்கு சென்று கொண்டிருக்கும் போது கல்லடி பிரதேசத்தில் 55 வயதான ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் மக்கள் வீதியில் இறங்கி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றாலும் நிலைமையை உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை.

இதனால் புத்தளம் - குருநாகல் வீதியூடான போக்கு வரத்திற்கு இடையூறு ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்க ஜயரத்ன அவ்விடத்திற்கு சென்றிருந்தார்.

புத்தளம் மாவட்ட வனஜீவராசிகள் உதவி பணிப்பாளரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தார்.

யானைகளை விரட்டும் செயற்பாடு இன்று முன்னெடுக்கப்படும் என வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

இந்நிலையில், கெப்பிட் டிக்கொல்லாவ பிரதேசத்தில் யானை தாக்கி 61 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவர் தமது விளைநிலத்திற்கு சென்றிருந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமது இந்தப் பிரச்சினை தொடர்பில் எவரும் கவனத்திற்கொள்வதில்லையென மக் கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னார்-தேத்தாவாடி பகுதியில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்கான 69 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று முற்பகல் 11 மணியளவில் யானையின் தாக்குதலுக்கு குறித்த நபர் இலக்கானார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று பேருடன் மாடு மேய்க்க சென்றிருந்த ஒருவரே காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

# இந்திய ட்ரோலர் ஆள்களின்றி நெடுந்தீவில் கரை ஒதுங்கியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.14

தமிழக மீனவர்களினுடையது என நம்பப்படும் மீன்பிடி ட்ரோலர் ஒன்று நெடுந்தீவுப் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் மீன்பிடித் துறை 08/எம்.எம்/145 இலக்கம் பொறிக்கப்பட்ட ட்ரோலர் விசைப் படகு ஒன்று இன்று காலை நெடுந்தீவில் அவதானிக்கப்பட் டுள்ளது. இவ்வாறு கரை ஒதுங்கிய படகு தொடர்பில் உள்ளூர் மீனவர்கள் கடற்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

மீனவர்களின்தகவலின்அடிப்படையில் சம்பவ இடத்திற் குச்சென்ற கடற்படையினர் தமி ழக மீனவர்களிற்கு சொந்தமானது எனக் கருதப்படும் படகினை கைப்பற்றி படகில் சோதனையில் ஈடுபட்டனர். இருந்த போதும் பட கில் எவருமே இருக்கவில்லை. இதனையடுத்து கடத்தல் பொருள்கள் ஏதேனும் உள்ளனவா எனவும் தேடுதல் இடம் பெற்றது.

இவ்வாறு எவரும் அற்ற நிலையில் நெடுந்தீவை படகு அடைந் துள்ளதனால் அந்தப் படகு மூலம் சட்டவிரோதிகள் எவராவது ஊடுருவியுள்ளனரா என்பது தொடர்பில் தற்போது ஆராயப்படுவதாகக் கூறப்பட்டது.

# இலங்கையின் 2 ஆவது சிறுபான்மை இனமாக 2031 இல் தமிழர்கள் மாறும் நிலைமை வரும்!

## எச்சரிக்கிறார் சமூக மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன்

இலங்கையில் இதுவரை காலமும் முதலாவது சிறுபான்மை இனமாக இருந்த தமிழர்கள் 2031 ஆம் ஆண்டளவில் இரண்டாவது சிறுபான்மை இனமாகக் காணப்படுவார்கள் என சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'தமிழர்களின் எதிர்காலம் ஒரு குடித் தொகையியல் நோக்கு' எனும் நிகழ்வில் பிரதம வளவாளராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் சனத்தொகை பெருக்க வீதம் வருடா வருடம் குறைவடைந்தே செல்கிறது. யுத்தம், நலிவுற்ற பொருளாதாரம், புலம் பெயர்வு, காலம் பிந்திய திருமணம், குடும்பக் கட்டமைப்பு சிதைவுகள், நாகரீகம், கருத்தடைகள், குடும்ப கட்டுப்பாடுகள் எனப் பல்வேறு காரணிகளைக் கூறிக்கொண்டே போகலாம். இந்தக் காரணிகளால் தமிழர்களின் சனத் தொகை குறைவடைந்து செல்கின்றமையை நாம் கண்முன்னே காண்கின்றோம். வடக்கு கிழக்கில் தமிழ் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணைந்துகொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் குறைவடைந்து செல்கின்றமையைப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இது எமது இனத்துக்கு ஆபத்தானது. ஆரம்பத்தில் யாழ் தேர்தல் தொகுதியில் 11 நாடாளுமன்ற பிரதிநிதிகள் இருந்தார்கள் ஆனால் தற்போது 7 நாடாளுமன்ற உறுப்பினர்களே உள்ளனர். தமிம் மக்களின் சனத் தொகை குறைவடைந்ததன் விளைவே இது எனத் தெரிவித்த அவர், தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் இது தொடர்பில் சிந்தித்து செயற்படுகின்றார்கள் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

தமிழ்த்தலைமைகள் அரசியல் உரிமை பிரச்சினைக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவைத்தை இப்படியாக ஓர் இனத்தின் ஆபத்தான பிரச்சினைகளுக்குக் கொடுப்பதில்லை எனவும், தமிழ் மக்களின் சனத் தொகை இப்படியே சென்றால் வென்றெடுக்கும் உரிமைகளை அனுபவிக்க மக்கள் இருப்பார்களா என்ற கேள்வியே எழுகிறது.

எனவே தமிழினத்தின் சனத்தொகை அதிகரிப்பை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, தவறின் 2028 இல் முதலாவது சிறுபான்மை இனம் என்ற நிலையில் இருந்து இரண்டாவது சிறுபான்மை இனமாக தமிழ் மக்கள் காணப்படுவார்கள். இது 2031 ஆம் ஆண்டின் சனத் தொகை மதிப்பீட்டில் புலப்படும் எனத் தெரிவித்த அவர், இலங்கையின் சனத்தொகை பெருக்க வீதத்தில் முஸ்லிம்கள், சிங்களவர்களுக்கு அடுத்தப்படியாகவே தமிழர்கள் காணப்படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## கல்வி அமைச்சுடன் தொடர்புகளை ஏற்படுத்த 185 தடவைகள் தொலைபேசி எடுத்த மாணவி!

தனது அவசர தேவையொன்றுக்கான பதிலை பெற்றுக்கொள்வதற்காக பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு மாணவியொருவர் 185 தடவைகள் தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதிலும், அதிகாரிகளிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த மாணவியொருவருக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை முதல் மாலைவரை மேற்கொண்ட முயற்சியின் ஊடாக, மாணவியின் 186 ஆவது தொலைபேசி அழைப்புக்கு கல்வி அமைச்சின் அதிகாரிகள் பதிலளித்துள்ளனர்.

கல்வி அமைச்சின் உரிய பிரிவினரைத் தொடர்புகொள்வதற்கு 9 மணி முதல் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், 185 அழைப்புக்களை எந்தவொரு நபரும் ஏற்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

மேற்படி மாணவி, மூன்று தொலைபேசிகளின் ஊடாக, கல்வி அமைச்சைத் தொடர்பு கொள்ள முயற்சித்துள்ளார் என அறிய முடிகின்றது.

எனினும், 186 ஆவது அழைப்பை ஏற்ற பெண் அதிகாரியொருவர், குறித்த மாணவிக்கு பதிலளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 'பண்டாரம் - வன்னியனார்' வரலாற்று நூல் வெளியீடு!

வரலாற்றாய்வாளர் அருணா செல்லத்துரையின் 'பண்டாரம் - வன்னியனார்' வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா, வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வாழ்த்துரையை தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி க.சுவர்ணராஜா நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை சட்டத்தரணி சிற்றம்பலம் வெளியிட்டுவைக்க, அதன் முதற்பிரதியை வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வீ.ஜெகசோதிநாதன் பெற்றுக்கொண்டார்.

நூலிற்கான மதிப்பீட்டுரையை புளியங்குளம் ஆசிரியர் வாண்மைவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் நிகழ்த்தியமையுடன், பதிலுரையை நூல் ஆசிரியரும் நன்றியுரையை மருத்துவர் செ.மதுரகனும் நிகழ்த்தியிருந்தனர்.

ஆய்வாளர் அருணா செல்லத்துரையின் வன்னி மண்சார்ந்த வரலாற்றாய்வு நூல்களில் இது 9 ஆவது நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# சாத்தியமற்றவையையே சாணக்கியன் பேசுகிறார்

## பிள்ளையான் கிண்டல்



மட்டக்களப்பு, மார்ச் 15

சாணக்கியன் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களை பேசி வருகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் மேலும் கூறியுள்ளவை வருமாறு - எந்த வேலைத்திட்டத்தையும் செய்யாமல், வீதிகளை அமைத்து குளங்களை அமைத்து நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை விடுத்து அவன் வருகின்றான், இவன்வருகின்றான், விகாரைகளை அமைக்கின்றான் என்று கூறினால் என்ன மாற்றத்தை நீங்கள் ஏற்படுத்தப் போகின்றீர்கள்.

நாம் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களையே சொல்கின்றோம். நாங்கள் முதலில் மாற வேண்டும். வேறு எவரதும் கால்களைப் பிடிக்கத் தேவையில்லை.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, மக்களை முன்னேற்றுகின்ற பலப்படுத்துகின்ற கட்சியாகும். எங்கள் வேலைத்திட்டம் மிகத் தெளிவானது.

அடுத்தமுறை எமது மாவட்டத்திற்கு ஜனாதிபதி வருவாரானால் தொழில்வாய்ப்பை பெருக்குவதற்கு, தொழிற்பேட்டைகளை அமைக்கலாமா, இங்கேயே 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கலாமா என்பது தொடர்பாகக் கலந்துரையாடுவோம்.

நாங்கள் முதலில் வவுணதீவு, கரடியனாறு போன்ற பகுதிகளில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்வோம். இதற்காக 40 கோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

புதிய அரசாங்கத்தின் கொள்கையால் மட்டக்களப்பு மாவட்டம் நன்மையடைகின்றது. நாங்கள் இந்த அரசாங்கத்தின் கொள்கைகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் பிறரை எதிர்பார்த்திருந்து பின்தங்கிவிட்டோம். இப்போது நாம்தான் அனைத்தையும் செய்யப்போகின்றோம்.

நாங்கள் யாழ்ப்பாணத் தலைவர்களின் கதைகளைக் கேட்டு துப்பாக்கி ஏந்தி போராடினோம். எமது மாவட்டத்தின் இளைஞர்கள் பலர் மரணித்திருக்கின்றனர். அவர்களின் நோக்கம் இங்கு வாக்குகளைப் பெறுவதாகும்.

சாணக்கியன் போன்றவர்களை பயன்படுத்தி சுமந்திரன் வாக்குகளை பெறவேண்டும். தமிழரசுக்கட்சியின் செயலாளர் பதவியை சுமந்திரன் பெறுவதற்காக அவரை பயன்படுத்துவார். கட்சிக்குள் பலத்தைக் கூட்டுவதற்கே பார்க்கின்றனர்.

இன்று மேய்ச்சல் தரைப் பிரச்சினை பற்றிக் கதைக்கின்றனர். அதுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கைத் தாக்கல் செய்யுங்கள், சென்று போராடுங்கள். அதுதான் உங்கள் வேலை. நாங்கள் மக்களின் தேவையை நிறைவேற்றுவோம். ஆனால் அவர்கள் அதனை செய்வதில்லை எங்களை தாக்குவதிலேயே குறியாக இருக்கின்றனர். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் இதுவரையில் 45 சடலங்கள் அடக்கம்!

## இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு, மார்ச் 15

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த 45 கொரோனா சடலங்கள் இதுவரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்

இந்த நிலையில், கொரோனா சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பாக காணப்பட்ட பிரச்சினைகள் முழுவதுமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்னும் ஓரிரண்டு சடலங்கள் உள்ளன எனவும் அவை விரைவில் அடக்கம் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில், ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

# கொரோனாவிலிருந்து 395 பேர் குணமடைவு!

இலங்கையில் மேலும் 395 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 84 ஆயிரத்து 648 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 87 ஆயிரத்து 600 பேருக்கு கொரோனாத் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 526 பேர் இதுவரையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழிற்சங்க நடவடிக்கையில் அரச வைத்திய அதிகாரிகள்!

கொழும்பு, மார்ச் 15

நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார சேவை யாப்பை திருத்தத்திற்கு உட்படுத்தி, வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறாவிட்டால் முன்னறிவிப்பின்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அந்த சங்கம், சுகாதார சேவை யாப்பானது, வைத்தியத்துறைசார் முக்கியஸ்தர்களின் இணக்கப்பாடின்றியே திருத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளது.

குறித்த திருத்தங்கள் காரணமாக பல பிரச்சினைகள் ஏற்படும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 18 ஆம் திகதி சங்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# வீதி விபத்துக்களினால் சனி மாத்திரம் 12 பலி!

நாட்டில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் வீதி விபத்துக்களில் சிக்கிய 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனப்பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஏழு பேரும், அதற்கு முன்னர் ஏற்பட்ட வீதி விபத்துக்களில் சிக்கி மேலும் ஐந்து பேருமே இவ்வாறு உயிரிழந்திருக்கின்றனர் எனப் பிரதி பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தற்சமயம் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், வாகன சாரதிகள் போக்குவரத்து சட்டங்களை அவசியம் கடைப்பிடித்து வாகனங்களை செலுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.


யாழில் No.1 ஆங்கிலப்பயிற்சி மையம்
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
நேரடி வகுப்பு
பிரிவு - I - 15/03/2021 - Mon
பிரிவு - II - 17/3/2021 - Wed
பிரிவு - III - 22/3/2021 - Mon
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Call now 0777173517
உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு
யாழ்ப்பாணம் Mon,Wed,Fri - 9:00 a.m. Mon,Wed,Fri - 3:00 p.m. Sat,Sun - 2:00 p.m.
நெல்லியடி Tue,Thu - 3:30 p.m. Sat,Sun - 3:30 p.m.
சுன்னாகம் Mon,Wed,Fri - 3:00 p.m. Sat,Sun - 3:30 p.m.
கிளிநொச்சி Sat,Sun - 9:00 a.m.
சாவகச்சேரி Tue,Thu - 8:00 a.m.
சண்டிலிப்பாய் Mon,Wed,Fri - 1:30 p.m.
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
IELTS Student visa மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
IELTS Life Skills A1 திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403
நெல்லியடி 021 226 2470
சாவகச்சேரி 021 227 0775
சுன்னாகம் 021 224 1970
சண்டிலிப்பாய் 021 225 6665
கிளிநொச்சி 021 228 5655

Anna EXPRESS Courier Services
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

CNR world wide Express
International Courier & Cargo Service.
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.
அனுப்பும் பொதிகளை இணையத்தளத்தில் கண்காணிக்கும் வசதி.
இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.03.2021 இல் வெளியிடப்பெற்றது.